# சுடர்
# CHUDAR

கலை
இலக்கியத்
திங்கள்
இதழ்



விலை
ரூபா 1-00

மார்கழி - 1978

# செய்தி அலைகள்

## அமைச்சர் 'தேவா'வின் அநாகரிக அறிக்கை

**(சூறாவளியினால் ஏற்பட்ட புயல் அலைகளினால் மட்டக்களப்பில் இருந்து பறந்து வந்த ஓர் செய்திக் கடிதம்.)**

சூறாவளிப்பேயினால் மட்டுமா நகரமும் அதனைச் சார்ந்த தமிழ்ப் பிரதேசங்களும் மிகக்கோரமாக நிர்மூலமாக்கப்பட்டுள்ள இந் நேரத்தில், தமிழ் பேசும் நெஞ்சங்கள் எல்லாம் பாதிக்கப்பட்ட மக்களுக்காக ஏங்கித் தவிக்கின்றன. நாட்டின் பல பாகங்களிலுமுள்ள ஏராளமான தமிழ் வர்த்தகர்களும், அன்பர்களும் எவ்வித பிரதேசப் பாகுபாடும் இன்றி நேரடியாகவே பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்று, அகதிகளாக மாறி நிற்கும் மக்களை தங்கள் உடன் பிறப்புக்களாகக் கருதி உணவு, உடை, மற்றும் பல உதவிகளை நேரடியாகவே செய்யும் காட்சிகளை என் கண்ணாரக் கண்டு வியந்தேன். ஆகஸ்ட் கலவர நேரத்தில் எம்மை அடித்து விரட்டிய சிங்கள இனத்தைச்சேர்ந்த சில 'நல்லவர்கள்'கூட இவ்வித உதவிகள் செய்வதைக் கண்டு இந்நாட்டில் 'காருண்ணியம்' செத்துவிடவில்லை என்பதையும் உணர்ந்தேன்.

ஆனால், அமைச்சர் தேவநாயகத்தின் அறிக்கையையும் (வீரகேசரி 11-12-78) தமிழர் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான திரு. அ. அமிர்தலிங்கம் அவர்களோடு, அமைச்சர் வாதிட்ட விதத்தையும் பத்திரிகையில் படித்த போது அவரின் மிக அநாகரிகமான—குறுகிய கண்ணோட்டத்தைக்கண்டு கண்ணீர் விட்டேன்.

நீதி அமைச்சரின் பாரியாரான திருமதி தேவநாயகம் கூட 'கண்ணாடி வீட்டில் இருந்து கல் எறிந்து விட்டார்'. அதாவது தளபதி 'அமிர்' அவர்களிடம் "யாழ்ப்பாணத்து ஆட்கள் தேவையில்லை. நாமே நம்மைப் பார்த்துக் கொள்வோம்" என்று கூறினாராம். இதைக் கேட்ட தலைவர், "அப்படியானால் நீங்கள் தான் முதலில் உடனடியாக யாழ்ப்பாணத்துக்குக் கிளம்பவேண்டும் அம்மணி" என்று சரியாகவே பதிலடி கொடுத்து, அமைச்சர் தம்பதியினரின் அரசியல் நோக்கை அப்பட்டமாகவே வெளிக்காட்டி விட்டார்.

இச்சந்தர்ப்பத்தில் உணர்ச்சிக் கவிஞர் அவர்கள் முன்பொருமுறை ஒரு கூட்டத்தில் பேசியது ஞாபகத்துக்கு வருகிறது. அவர் கூறினார்: "மட்டக்களப்பில் இருந்து யாழ்ப்பாணத்துவேசம் பேசுவோர் 75 வீதம் யாழ்ப்பாண வித்துக்களே. அசல் மட்டக்களப்பு வித்துக்கள் எவரும் துவேசம் பேசவில்லை".

கவிஞரின் பேச்சு நூற்றுக்கு நூறு வீதம் உண்மையே.

திருமதி தேவநாயகம் யார்? அசல் யாழ்ப்பாணத்து வித்தில் முளைத்தவர்தான். நீதி அமைச்சரின் அந்தரங்க செயலாளராக இருப்பவர்—யார்? கிழக்கிலங்கையைப் பற்றியே நன்கு தெரியாதவர்.

இவர்கள் மட்டக்களப்புக்குப் போய் 'யாழ்ப்பாணத்தவர்' எமக்கு வேண்டாம் எனக் கூறுகிறார்கள். இது என்ன விந்தையோ?

நாடு முழுவதற்குமான நீதி அமைச்சர் சொல்கிறார்: 'கிழக்கு மாகாணத்தை தவிர்ந்த பிற பிரதேசங்களைச்சேர்ந்த எந்த தொண்டர்களும் இங்கு வந்து புனரமைப்பு வேலைகளில் ஈடுபடத்தேவையில்லை' என்று. இது அரசியல் தெரியாத மிகக் குறுகிய அநாகரிகப் பேச்சாகும். சூறாவளிக் கொடுமையினால் வெந்து புண்ணாகியிருக்கும் நெஞ்சங்களில் வேலைப் பாய்ச்சுவது போன்ற செயலே இது.

தமிழன் எங்கு வாழ்ந்தாலும் அவனுக்கு இன்னல் நேர்ந்தால் முழுத்தமிழ் சமுதாயமுமே கண்ணீர் வடிக்கும். காரணம்—கருணையும் காருண்யமும் கொண்ட இனம் தமிழினம். கலங்கித் தவிக்கும் மட்டுநகர் மக்களுக்காக கரங்கொடுத்து உதவத்துடிக்கும் பிற பகுதி தமிழ் வாலிபர்களும் இளம் உள்ளங்களும் துடித்து நிற்கும் இவ்வேளையில் இவ்வித அறிக்கைகள் அவசியந்தானா?

வெளிநாட்டு அமைச்சர் ஜனாப் ஏ. ஸி. எஸ். ஹமீத், சபாநாயகர் ஜனாப் பாக்கீர் மார்க்கார், ஆகியோருக்கு கிழக்கிலங்கை மக்கள் மீது எவ்வித அக்கறை இருக்கிறதோ அதே அக்கறைதான்—தமிழீழ முதல்வரான திரு. அ. அமிர்தலிங்கத்துக்கும் இருக்கிறது என்பதை அமைச்சர் இனியாவது உணர்ந்து கொள்ளவேண்டும். குறுகிய அரசியல் நோக்கை வைத்து செயல்படுவது தவிர்க்கப் பட்டால்தான் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியான நிவாரணத்தை வழங்க முடியும்.

—புயலால் பாதிக்கப்பட்ட ஓர் அகதி,
,மட்டக்களப்பு.

சுடர்
கலை, இலக்கியத்
திங்கள் இதழ்

மார்கழி—1978.
சுடர் 4—ஒளி—9.

# இயற்கையை வெல்வோம்

பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடும்.

தமிழினத்தைப் பொறுத்தளவில் இந்தப் பழமொழி நூற்றுக்கு நூறு மெய்யாகி வருகிறது.

மனிதரால் செயற்கையாக இழைக்கப்படும் கொடுமைகள் போதாதென்று இயற்கையும் தனது கைவரிசையைக் காட்டி விட்டது.

இயற்கைக்கும், தமிழினத்திற்கும் உள்ள இப் பகைமை இன்று நேற்று ஏற்பட்டதல்ல. காலாதி காலம் தொட்டு தொடர்ந்து வருகிறது.

தமிழ் நிலப்பரப்பைக் கடல் விழுங்கிய கொடுமையை சங்க இலக்கியம் கதை கதையாகச் சொல்கிறது. இந்தத் தொடர் கதையின் இன்னொரு புதிய அத்தியாயந்தான், மீன்பாடும் தேன் நாட்டை அண்மையில் நிர்மூலமாக்கி விட்ட ஊழிக் காற்று.

வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத இழப்பு ஒரு சில மணித்தியாலங் களில் ஏற்பட்டு விட்டது.

உயிரிழப்பு, பொருள் இழப்பு வஞ்சகமில்லாமல் நிகழ்ந்திருக்கிறது.

மனைவியை இழந்த கணவன்—
கணவனை இழந்த மனைவி—
மக்களைப் பறி கொடுத்த தாய் தந்தையர்—
பெற்றோரைப் பறி கொடுத்த பிள்ளைகள்—
வீடு வாசலை இழந்த குடும்பங்கள்—
முழுக்குடும்பமே மறைந்து விட்ட கொடுமை.

இவற்றைக் கற்பனை பண்ணிப் பார்த்தாலே பயங்கரமாக இருக்கும். உண்மையாகவே நடந்தால் எப்படி இருக்கும்?

நடந்தது நடந்து விட்டது. இனி நடப்பதைக் கவனிக்க வேண்டும். துயர் களையும்பணி அசுரவேகத்தில் நடைபெற வேண்டும்.

சிங்கள அரசு மட்டும் எல்லா உதவிகளையும் செய்யும் என்று நம்பியிருக்க முடியாது.

பிற நாடுகளின் உதவியும் சுவறவேண்டியளவு சுவறும் என்றும் எதிர் பார்ப்பதற்கில்லை.

அகப்பை அவர்கள் கையில். எனவே நுனிப்பந்தியில் இருந்தும் பிரயோ சனம் இராது.

தென் ஈழத்தின் துயர் துடைக்க, அவர்களின் கண்ணீரைத் துடைக்க முழு ஈழ தமிழ் மக்களின் உடல் பொருள் இரண்டுமே உதவ வேண்டும். கட்டாயம் உதவியே ஆகவேண்டும்.

உதவுவார்கள் என்பது எமது அசைக்க முடியாத நம்பிக்கை,
இயற்கையை மீண்டும் வெல்வோம்.

# மேடை

## தமிழ் ஒலிபரப்பு:-

தமிழ் ஒலிபரப்பில் கேட்கும் செய்தி வாசிப்பாளர்களது குரல் கேட்போர்களது செவிப்பறையில் கர்ண கடூரமாக விழுகிறது. தமிழ் ஒரு இனிமையான மொழி என்று சொல்கிறோம். ஆனால் இந்த அறிவிப்பாளர்களது குரலைக் கேட்கும் எவரும் இதை நம்ப மாட்டார்கள். குரலில் இருக்கவேண்டிய குழைவும், இனிமை, கம்பீரம் இரண்டொரு அறிவிப்பாளரை விட மற்றவர்களிடம் இவை மருந்துக்கும் இல்லை. தமிழைச் சரியாக உச்சரிக்கக் கூட இவ்வறிவிப்பாளர்களால் முடியாமல் இருக்கிறது. ர, ற ஒலி வித்தியாசத்தைக் கூடச் சரியாக உச்சரிக்கிறார்கள் இல்லை.

மரண அறிவித்தல் அறிவிப்பவரது குரல் மட்டும் சொல்லுகிற விடயத்திற்குப் பொருத்தமாக ஒலிக்கிறது.

## சூறாவளி:-

சூறாவளியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்ட மாவட்டம் மட்டக்களப்பு. இதைப் பிரதம மந்திரி அவர்களே ஒப்புக்கொண்டு வாய் விட்டுச் சொல்லியிருக்கிறார், இருந்தும் அதி உத்தம ஜனாதிபதி இந்த மாவட்டத்திற்கு சூறாவளி வேகத்தில் வந்து விமான நிலையத்தில் தங்கி விட்டுப் பறந்திருக்கிறார்.

இன்னும் ஒன்று கவனிக்கத்தக்கது. சூறாவளி வீசியது நவம்பர் 23ல். ஜனாதிபதியும், பிரதமரும் இப்பகுதியைச் சுற்றிப் பார்க்க வெளிக்கிளம்பியது டிசெம்பர் 8ல். அதாவது இருவாரங்கள் சென்றபின் தான் கிளம்பியிருக்கிறார்கள். இதே நேரத்தில் எதிர்க் கட்சித் தலைவர் அமிர்தலிங்கம் நவம்பர் 26ந் திகதியே மட்டக்களப்பிற்குப் பறந்து போயிருக்கிறார். தானாடாவிட்டாலும் தன் தசை ஆடும் என்பதற்கு இந்தச் சம்பவம் நல்லதோர் எடுத்துக்காட்டு.

## தமிழ் ஈழப் பிரசாரம்:-

தமிழ் ஈழப் பிரசாரம் தைக்கவேண்டிய இடத்தில் தைத்திருக்கிறது. வெளி நாடு சென்று திரும்பிய கல்வி அமைச்சரும் இதை மறைக்காமல் ஒப்புக்கொண்டிருக்கிறார். பிரான்ஸ் நாட்டில் இரண்டாயிரம் பேர் தாங்கள் அரசியல் அகதிகள் என்று சொல்லிக் கொண்டு தொழில் தேடியிருக்கிறார்களாம். இதே போல் இங்கிலாந்திலும் பல ஆயிரம் பேர் தாங்கள் தங்கள் சொந்த நாட்டிலேயே காட்டுமிராண்டித் தனமாக நடத்தப்படுவதாகக் குற்றம் சாட்டியுள்ளார்களாம். இதை மறைக்காமலும் மறக்காமலும் வெளியிட்ட கல்வி அமைச்சருக்கு நாம் நன்றி சொல்ல வேண்டும்.

## தரப்படுத்நல்:-

தரப்படுத்தல் மீண்டும் அமுல் செய்யப்படுகிறது. அரசாங்கம், (மந்திரி தேவநாயகம் உட்பட) இதுபற்றி ஒரு தீர்க்கமான முடிவை ஏற்கனவே எடுத்து விட்டது. சமத்துவம், சுதந்திரம் என்ற இனிப்பான பேச்செல்லாம் உதட்டளவில் தான். உள்ளத்தில் சிங்கள ஏகாதிபத்தியமே முழுக் குறிக்கோள். ஐக்கிய தேசியக் கட்சியின் வரலாற்றைத் தெரிந்தவர்களுக்கு இந்தத் தரப்படுத்தல் முடிவு கொஞ்சமும் ஆச்சரியமானதல்ல.

## ராஜ தந்திரம்:

அரசியல் ராஜ தந்திரத்திற்கு சிங்களவர்களிடம் தமிழர் பிச்சை வாங்க வேண்டும். எல்லாளன், கைமுனு காலந்தொட்டு இன்று வரை இக்கதை தொடர்கிறது. ஐம்பதுக் கைம்பது கேட்ட பொன்னம்பலத்தை ஆயிரத்துத் தொளாயிரத்து நாற்பத்தெட்டில் மந்திரிப்பதவி கொடுத்துச் சேர்த்துக்கொண்டது; சமஷ்டி கேட்ட திருச்செல்வத்தை 1965ல் மந்திரியாகச் சேர்த்துக்கொண்டது. தொண்டமானை 1978ல் மந்திரியாக்கியது இவையெல்லாம் சிங்கள ஆட்சியாளர்களின் அரசியல் சாணக்கியத்தின் ஒரே பதிப்புக்களே. இதன் தொடர்ச்சிதான் கூட்டணிக்கு வீசப்படும் "ஒத்துழைப்புக்" கோரிக்கையும்.

## தார்மீகம்:-

சுதந்திரக் கட்சி ஆட்சியில் பத்திரிகையிலும், வானொலியிலும் 'பண்டாரநாயக்கா கொள்கை' படாத பாடுபட்டது. இதே மாதிரித்தான் இப்போது 'தார்மீகம்' படாத பாடுபடுகிறது. தார்மீகம் சிங்கள மக்கள் மத்தியிலும் நகைப்புக்குரிய ஒரு வார்த்தையாக வந்து விட்டது.

## பத்திரிகைகள்:-

அரசின் கட்டுப்பாட்டில் உள்ள ஏரிக்கரை, ரைம்ஸ் பத்திரிகைகள் மட்டுமல்ல குணசேன நிறுவனப் பத்திரிகைகளும் தமிழர்களுக் கெதி

ராகத் திட்டமிட்ட பிரசாரத்தை பெருமள வில் நடத்தி வருகின்றன. உதாரணமாக தமிழ் மாணவர்களுக்கும் தமிழ் விரிவுரை யாளர்களுக்கும் எதிராகத் திட்டமிட்ட பிர சாரம் முடுக்கி விடப்பட்டது. அதே போல் தான் வடக்கில் நடந்த ஒரு வங்கிக் கொள்ளை பற்றியும் கண், காது, மூக்கு வைத்து இப் பத்திரிகைகள் செய்திகளை வெளியிட்டு வரு கின்றன. அதே வேளையில் யாழ்ப்பாணப் பொது மக்கள் மீது சிவில் உடையில் சென்ற பொலிசாரின் தாக்குதல் பற்றிய செய்தி இருட்டடிப்புச் செய்யப்பட்டு விட்டது. இத் தகைய பிரசாரத்தை முறியடிக்க மாற்று மருந்து கட்டாயம் வேண்டும். தமிழர்க் கென்று ஒரு தமிழ் நாளேடும் குறைந்தது வாரத்துக்கொருமுறை வெளிவரக்கூடிய ஆங்கில ஏடும் அவசியம் தேவை. ஒரு வரை யறுக்கப்பட்ட நிறுவனத்தைத் தொடக்கி அதன் மூலம் நிதி திரட்டி இந்தப் பணியைத் தொடக்கலாம். கூட்டணித் தலைமைப் பீடம் வட்டுக்கோட்டை பா. உ. திருநாவுக்கரசு விடம் இந்தப் பொறுப்பை ஒப்படைக்க வேண்டும்.

### கலாசாரக் கூட்டம்:-

கொழும்பில் கட்டத் தொடங்கிய இந்துக் கலாசாரக் கூட்டம் அரை குறையில் மழை யில் நனைந்து வெயிலில் காய்ந்து கொண்டிருக் கிறது. தமிழர்கள் அதுவும் சைவத் தமிழர் களிடம் வாயிருக்கும் அளவுக்கு செயல் திறமை இல்லை என்பதற்கு இது ஒரு நல்ல எடுத்துக்காட்டு. இந்தக் கட்டடம் மட்டு மல்ல இதைக் கட்டத் தொடங்கிய இந்து மாமன்றமே முகவரி இன்றிப் போய் விட்டது போல் தெரிகிறது!

### பிரமுகர்கள்:-

துரையப்பா உயிரோடு இருந்த காலத்தில் அவர் பின் சுற்றிக்கொண்டிருந்த இரண் டொரு முன்னாள் யாழ்-மாநகர சபை உறுப் பினர்கள் இன்று கூட்டணிப் பிரமுகர்களாக வர்ணிக்கப்பட்டு பத்திரிகைகளிலும் செய்தி கள் வருவதைப் பார்க்க அழுவதா? சிரிப் பதா? என்று தெரியவில்லை. துரையப்பா மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரும் முயற்சியில் இன்றைய யாழ்-பா. உ. இறங்கிய நேரத்தில், திரு. யோகேஸ்வரனைக் கண்டு ஓடி ஒளித்தவர்கள் தான் இந்தப் பிர முகர்கள் என்பதை இதற்குள் யாரும் மறந்து விட முடியாது.

### உள்ளூராட்சித் தேர்தல்:-

'மூடக் கழுதைக்குச் சறுக்கியது சாட்டு' என்பது போல சூறுவளியைச் சாட்டாக வைத்து உள்ளூராட்சி அமைச்சர் உள்ளூராட் சித் தேர்தல்களை மேலும் ஒரு வருடத்திற்கு ஒத்தி வைத்துவிட்டார். மூன்று மாதத்தில் தேர்தல் நடக்கும் என்று முழங்கிய அமைச்சர், முப்பது மாதங்களுக்குப் பிறகும் தேர்தலை நடத்துவாரா என்பது இன்று சந்தேகமாக இருக்கிறது? 8 ரூத்தல் தானியம், வாழ்க் கைச் செலவுக்குறைப்பு, வேலையில்லாத் திண்டாட்ட ஒழிப்பு போன்ற வாக்குறுதிகளை அள்ளி வீசி ஆட்சிக் கட்டிலைப் பிடித்த யூ. என். பி. அந்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வழியின்றித் தவிப்பதே தேர்தலை சந்திக்கத் தயங்குவதற்குரிய உண்மையான காரணம் என்பது வெளிப்படை.

நக்கீரன்

---

## என்றோ ஒரு நாள் மலரும்

க. சுந்தரலிங்கம்


மோகனங்கள் மலர
முல்லைமலர் மாலைகட்டி
வசந்தங்கள் வாழ்த்தொலிக்க
வாழ்ந்திருக்கும் பிஞ்சு மனங்களே!

கண்ணுக்குள் இருக்கின்ற
கண்களின் மணியினைநீர்
கவனமாய் காப்பதுபோல்
தண்டமிழ் மண்ணை
தளராது காத்திடுவீர்

என்றோ ஒரு நாள்
இந்த வையம் வெடித்து
புதிய தமிழ் ஈழமொன்று
பூப்பதனைக் காண்பீர்கள்

தூயமலர்ப் பஞ்சணையில்
தூங்குகின்ற குழந்தைகளே
மாயமணிப் புன்னகையால்
மயக்குகின்ற மழலைகளே
ஆயமென் முலைப்பாலில்
அமிழ்ந்திருக்கும் குழவிகளே!

என்றோ ஒரு நாள்
உங்கள் முயற்சியால்—உங்களுக்காக
இந்தவையகம் வெடித்து
புதியதொரு ஈழமொன்று
பூப்பதனைக் காண்பீர்கள்.



# உழைக்கப் பிறந்தவர்

காவலூர் எஸ். ஜெகநாதன்

நினைவுப் பூக்கள் என் நெஞ்சத்தில் தன் மெல்லிதழ்களைப் பதித்து நடக்கின்றன. ஓ...... அந்த நாட்கள்தான் எவ்வளவு இனிமையானவை. வாழ்வில் என்றுமே திரும்பிவர முடியாதவை. வாழ்க்கையின் மேடு பள்ளங்களை அறியாமல் சமதரையில் துள்ளிக்குதித்த அந்த நாட்கள்......

அப்படியே வாழ்வு முழுவதும் தொடர்ந்திருக்கக் கூடாதா? மனைவி, குழந்தைகள்...... குடும்பம் என்று இப்படி எத்தனை தொல்லைகள். நெஞ்சத்தில் சுமையேற்றி விட்டன. பள்ளிக்கூடத்தில் படித்துக்கொண்டிருந்த காலத்தில் இப்படி ஒரு தொல்லையும் இல்லையே!

அது வாழ்வின் வசந்த காலம். பள்ளிக்கூடம் முடிந்து மாலையாகிவிட்டால் சிட்டுக் குருவிகள்போல் மைதானத்தில் பறந்தோம். இன்று...... வாழ்க்கைச் சூறுவளியில் எதிர்த்து மிதப்பது எவ்வளவு சிரமமாக இருக்கிறது? அந்த நாட்கள்... அந்த நண்பர்கள் எதிர்காலத்தில் என்றும் சந்திக்கமுடியாத இனிய கனவுகள். விடுதிச்சாலையில் நான் வாழ்ந்த எட்டு வருடங்களும் வாழ்க்கை முழுவதுமே நான் நினைத்து நினைத்து மகிழக்கூடிய நனவுகள்.

அந்த நாட்களின் ஒவ்வொரு கணங்களும் தனித்தனியான சுவை.

இரவு சாப்பிடும்போது கத்தரிக்காய்ச் சட்டியையும் தூக்கிக்கொண்டு மயில்வாகனம் வரும் அழகைப்பார்க்க வேண்டுமே... தொழு தொழு என்று அந்தக் குண்டு உருவம் பரிமாறிக்கொண்டு வரும் போது ''என்ன மயிலு கை நீளுதில்லை.'' என்று கிண்டல் செய்வேன்.

மயிலு...

மயில்வாகனத்தை 'மயிலு' என்றுதான் அழைப்போம். பல சமையற்காரர்கள் இருந்த போதும் மயிலுதான் மாணவர்களுடன் கூடுதலாகப் பழகுவார். மயிலுவுக்கு இட்டலி போன்ற முகம். புடலங்காய் போன்ற கைகள். வயிற்றைப் பார்த்தால் அசல் பூசணிக்காய். இப்படித்தான் முன்பெல்லாம் மயிலுவை விமர்சிப்போம். இப்போதும் அப்படித்தானே இருப்பார்.

அம்மா என்னைப்பார்க்க விடுதிக்கு வந்தால் மயிலுவையும் கண்டு விசாரித்துவிட்டுத்தான் போவாள். "இந்த மாசத்திலே ரெண்டு படத்துக்குப் போனவர் இப்ப கூட்டாளிப் பெடியள் கூடிப்போச்சு. படிப்பிலே கவனமில்லைப்போல கிடக்குது'' என்று குற்றப்பத்திரிகை வாசிப்பார் மயிலு. எல்லாம் எமது நல்வாழ்வுக்குத்தான். விடுதியில் இருக்கும் மாணவர்கள் படித்து உயர்ந்த நிலைக்கு வரவேண்டுமென்பதில்தான் மயிலுவுக்கு எவ்வளவு ஆசை.

அன்னையைப்போல் அன்பு காட்டி உணவு தந்தார். தவறு செய்யும்போது தந்தையாகிக் கண்டித்தார். விளையாட்டு நேரத்தில் நண்பனானார். சமயத்தில் கூடப்பிறந்த அண்ணன் போலவே உதவி செய்தார்.

மயிலு...

என் வாழ்க்கைப் பாதையில் சந்தித்த ஜீவன்களில் நீ மேலானவன். மறக்கமுடியாத ஒரு பிறவி.

நான் உயர்தர வகுப்புப் படித்துக்கொண்டிருந்த காலம் தனது மூத்த மகன் ஆறும் வகுப்பு படிப்பதாகவும் என்ன கஷ்டப்பட்டென்றாலும் அவனைப் படிப்பித்து ஆளாக்க வேண்டுமென்றும் கூறுவார் மயிலு. கேட்கும்போது எங்களுக்கு மகிழ்ச்சியாக இருக்கும்.

இரண்டு பெண்பிள்ளைகள் இருப்பதாகக் கூறி பெருமூச்சுவிடுவார். பெண்ணைப் பெற்றவன். பெருமூச்சு விடாமல் வேறென்ன செய்வது?

சட்டக்கல்லூரிப் படிப்பு முடிந்த வருடம் ஒரு தடவை விடுதிக்குப் போயிருந்தேன். மயிலு குசினிக்குள் இருந்து கத்தரிக்காய் வெட்டிக்கொண்டிருந்தார்.

"மயிலு..." மாருத் வாஞ்சையுடன் அழைத்தேன்.

"தம்பி நீங்களா" மயிலுவுக்கு உண்டான மகிழ்ச்சியைப் பார்க்கவேண்டும்.

"நல்லா இருக்கிறீங்களா... உடம்பு வைச்சிருக்குதுதான். நல்லாக் கறுத்துப்போனியள்" மளமளவென்று கதைத்தார் மயிலு.

தன்னுடைய இரண்டு பெண்களுக்கும் திருமணத்தை நடத்திவிட்டதாகக் கூறினர். மகன் யூனிவர்சிற்றிக்கு எடுபட்டுள்ளதாகவும் அனுப்பிப் படிப்பிக்கப் போவதாகவும் கூறினர். எனக்குத் தாங்க முடியாத மகிழ்ச்சியாக இருந்தது.

விடுதியின் குசினிக்குள்ளும் டைனிங்ஹோலுக்குள்ளும் ஒரு மாறுதலும் இல்லாமல் சுற்றிக்கொண்டிருக்கிறர் அவர். அதே வேளையில் அவரால்... அவரது குடும்பத்தில் எத்தனை மாற்றங்கள். இரண்டு பெண்களுக்குத் திருமணம் முடிந்தது. மகன் யூனிவர்சிற்றியில் படிக்கப்போகின்றன்.

மயிலுவை நினைத்துப் பெருமைப்பட்டுக் கொண்டே விடைபெற்றேன். அந்த நாள் கூடக் கழிந்து ஐந்து வருடங்களுக்கும் மேலாகிவிட்டன.

மயிலு இப்போதும் விடுதியிலேயே இருப்பாரா? இருக்காது. மகன் படித்து முடித்திருப்பான். உத்தியோகத்தில் சேர்ந்ததும் அழைத்துச் சென்றிருப்பான். மகனுடைய வீட்டில் ஒரு மூலையில் சாய்மனைக் கட்டிலில் வெற்றிலைப் பையோடு சரிந்துகிடப்பார்.

நாளை அதையும் பார்த்துவிடலாம்தானே... மறுநாள் பழைய மாணவர் சங்கக் கூட்டம். என்னை உருவாக்கிய அந்தக் கல்லூரிக்குப் போகப் போவதை நினைக்கும்போதே... மனதில் மயிலுவின் நினைவுதான் முந்துகிறது. அந்த நினைப்புடன் 'நாளை' எப்போது வருமென்று காத்துக்கிடந்தேன்.

அந்த நாளும் வந்தது. குறிக்கப்பட்ட நேரத்திற்கு முன்பே கல்லூரிக்குப் போன நான் நேராக விடுதிச்சாலையின் குசினிக்குப் போனேன். நான் நினைத்ததுபோலவே மயிலுவைக் காணவில்லை.

ஓ... அவர் உழைத்து உருவாக்கிய பிள்ளைகள் அவரைச் சாகும்வரை குசினிக்குள் கிடந்து கஷ்டப்பட விடுவார்களா?

மணியம்தான் வந்தார். அவரும் ஒரு சமையற்காரர். "தம்பி நீங்களா?" அங்கிருந்தவற்றில் துப்பரவான கதிரையொன்றில் உட்காரவைத்தார். "மயிலு எங்கை போயிட்டார்" என்று ஆவலோடு கேட்டேன்.

"ஒரு கிழமை லீவிலை போனவர். இன்றைக்கு வந்திடுவார்... அவருக்கென்ன? மகன் பெரிய உத்தியோகத்தில சொந்தமா கார்கூட வைச்சிருக்கிறர். ம்... குடுத்துவச்சவர்". "மகன் வசதியாக இருந்தால்" அவரைக் கூட்டிக்கொண்டு போகவேண்டியதுதானே" கோபத்துடன் கேட்டேன். அதற்கு மணியம் எப்படிப் பதில் சொல்ல முடியும்? மணியம் தனது குடும்ப நிலைகளைக் கூறத்தொடங்கிவிட்டார். பதினைந்து நிமிடங்கள் கூடக் கழிந்திருக்காது.

விடுதிச்சாலையின் முன்னால் கப்பல் போன்ற காரொன்று வந்து நிற்கிறது. முன் சீற்றிலிருந்து மயிலு இறங்குகிறர். காரை ஓட்டிவந்தவன் கையசைத்துவிட்டு விடைபெற்றுச் சென்றுவிட்டான். மகனுகத்தான் இருக்கவேண்டும்.

"மயிலு" மாருத வாஞ்சையுடன் அழைத்தாலும் எனக்குத் தாங்கமுடியாத கோபம்.

"தம்பி..." என்னைக் கண்டது மயிலுக்கு மகிழ்ச்சி.

"மகன் வசதியாத்தானே இருக்கிறர். கடைசிகாலத்தில அவனேடபோய் இருங்களன். புகைக்குள்ள கிடந்து ஏன் சாகவேணும்,"

சிரித்தார் மயிலு. அதிலே பல அர்த்தங்கள்.

"மூத்தவளுக்கு எப்படியும் ஒரு வீடுகட்டிக் கொடுக்கவேணும்... மகனுக்குப்பட்ட கடன் கொஞ்சம் இருக்குது... சின்ன மருமகனுக்கு ஒரு தோட்டம் எடுத்துக்குடுக்காம அவனும் எவ்வளவு காலம்தான் இரவல் காணியிலை கமம் செய்யிறது..." மயிலு உற்சாகத்தோடு கூறிக்கொண்டே போனர். அவர்... உழைக்கப் பிறந்தவர்.

(யாவும் கற்பனை)

சுடர்

CHUDAR

## மாதம் ஒரு சிறுகதைக்கு பரிசு!

எழுத்தாளர்களை ஊக்குவிக்குமுகமாக ஒவ்வொரு மாதமும் சிறந்த ஒரு சிறுகதையை தேர்ந்தெடுத்து பரிசளிக்கும் திட்டம் ஒன்றினை செயற்படுத்தவிருக் கிறேம்.

சிறந்த சிறுகதை என நாம் தேர்ந்தெடுக்கும் கதைக்கு ரூபா 25 பரிசாக வழங்கப்படும். ஒவ்வொரு மாதமும் இப்பரிசு வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேம்.

சிறுகதைகளை அனுப்ப வேண்டிய முகவரி:

ஆசிரியர்,
சுடர்
194 ஏ, பண்டாரநாயக்க வீதி
கொழும்பு—12.

ஈழம் வாழ் தமிழ் மக்கள் மத்தியில் கவிதைத்துறையில் புகழ்பெற்றவர் காசி ஆனந்தன். நடனத் துறையில் புகழ் பெற்றவர் வேல் ஆனந்தன். இதேபோல் விளையாட்டுத்துறையில் புகழ்பெற்றவர் ஆழிக்குமரன் ஆனந்தன். அண்மையிற்கூட "நீரில் தவளை போல் நிற்கும்" ஒரு போட்டியில் ஈடு பட்டு உலக சாதனை ஒன்றை நிலைநாட்டி ஈழம் வாழ் தமிழ் பேசுமினத்திற்குப் புகழையும் செல்வாக்கையும் தேடிக்கொடுத்தவர் ஆழிக்குமரன் ஆனந்தன். அவர் "சுடர்" சஞ்சிகைக்காக அளித்த பிரத்தியேகப் பேட்டி இங்கே இடம் பெறுகிறது.

# கண்டோம் கருத்தறிந்தோம்!

கேள்வி: உங்களது வாழ்க்கை வரலாற்றைச் சுருக்கமாக எமக்கு எடுத்துக்கூற முடியுமா?

பதில்: எனது பிறந்த இடம் வல்வெட்டித்துறை. எனது தகப்பனுர் ஒரு நீர்ப்பாசன இலாகா பொறியியலாளர். நான் சிதம்பராக் கல்லூரி, யாழ்ப்பாணம் சம்பத்ரிசியார் கல்லூரி, பசறை மத்தியகல்லூரி, குருத்தலாவை சென்ற் தோமஸ் கல்லூரி, கல்கிசை சென்ற் தோமஸ் கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி ஆகிய கல்லூரிகளில் இடைநிலைக் கல்வி பெற்றேன். யாழ்ப்பாணக் கல்லூரியில் படித்து B. Sc. (லண்டன்) பட்டமும் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் படித்து எல். எல். பி. பட்டமும் பெற்று இலங்கைச் சட்டக் கல்லூரியில் கற்று சட்டத்தரணியானேன்.

கேள்வி: விளையாட்டுத்துறையில் உங்களுக்கு எவ்வாறு ஈடுபாடு ஏற்பட்டது?

பதில்: கல்லூரியில் படிக்கும்போது ஹொக்கி, கிரிக்கட் குழுக்களில் அங்கம் வகித்தேன். பல்கலைக்கழகத்தில் படிக்கும் போதுதான் விளையாட்டுத்துறையில் பூரணமாக ஈடுபட சந்தர்ப்பமும் வசதிகளும் கிடைத்தன.

கேள்வி: நீங்கள் விளையாட்டுத்துறையில் ஈடுபட உங்களுக்கு ஊக்கம் கொடுத்தவர் யார்?

பதில்: எனது நண்பர்கள்தான் எனக்கு ஊக்கமும் உதவியும் அளித்தார்கள்.

கேள்வி: நீங்கள் இப்போது யார் யாருடைய உலக சாதனைகளை முறியடித்திருக்கிறீர்கள் எனக் கூற முடியுமா?

பதில்: 'நீரில் தவளைபோல் நிற்றல்' விளையாட்டில் 51 மணித்தியாலங்கள் நின்று ஓர் உலக சாதனையை ஏற்படுத்தினேன். இதற்கு முன்னர் இந்தப் போட்டியில் உலக சாதனையை ஏற்படுத்தியவர் 42 மணித்தியாலங்கள்தான் செய்தார். அவர் அமெரிக்க நாட்டைச் சேர்ந்தவர். 'ஒற்றைக்காலில் நிற்றல்' போட்டியில் அமெரிக்க நாட்டைச் சேர்ந்த டொன்காட்டர் என்பவர் 8 மணித்தியாலங்கள் 46 நிமிடங்கள் நின்று ஏற்படுத்திய உலக சாதனையை நான் 12 மணித்தியாலங்கள் 46 நிமிடம் நின்று முறியடித்து ஒரு உலக சாதனையை ஏற்படுத்தினேன். 'தொடர்ந்து நடத்தல்' போட்டியில் 147 மணித்தியாலங்கள் தொடர்ந்து நடந்து ஒரு உலக சாதனையை ஏற்படுத்தினேன். ஆனுல் அதை ஏற்றுக்கொள்ளவில்லை.

கேள்வி: ஏன் அதை உலகசாதனையாக ஏற்க மறுத்து விட்டார்கள் என்று விளக்கிக் கூறமுடியுமா?

பதில்: காரணம் நான் மணித்தியாலங்களைத்தான் கருத்தில் எடுத்தேன். ஆனுல் ஒருவர் எத்தனை மைல்களை நடந்தார் என்பதையும் கணித்துத்தான் உலகசாதனையா? இல்லையா? என்பதைத் தீர்மானிப்பார்கள். நான் தூரத்தைக் கணக்கில் எடுக்காதபடியால் அதை ஒரு உலக சாதனையாக ஏற்க மறுத்துவிட்டார்கள். 314 மைல்கள் நடந்திருந்தால்தான் அது உலக சாதனையாகக் கணிக்கப்பட்டிருக்கும்.

கேள்வி: நீங்கள் அரசாங்கத்திடமிருந்தோ அல்லது வேறு தனிப்பட்ட நிறுவனங்களிடமிருந்தோ எத்தகைய உதவியை எதிர்பார்க்கிறீர்கள்?

பதில்: தொடர்ந்து மோட்டார் வாகனத்தை இடைவிடாமல் செலுத்துதல் போட்டிக்கு விளையாட்டுமைதானம் வேண்டும். மகாராஜா, உபாலி முதலான நிறுவனங்களிடமிருந்து இதற்கு உதவி கேட்டேன். ஒருவரும் உதவி செய்ய முன்வரவில்லை. மகாராஜா நிறுவனம் சிங்களவருக்கு உதவி செய்கின்றது தமிழனுக்கு உதவி செய்வதில்லை. உபாலி நிறுவனம் நான் போட்ட கடிதத்திற்கு ஒரு பதிலும் போடவில்லை. அரசாங்கம் எந்த உதவியுமே என்றும் செய்ததில்லை.

கேள்வி: அரசாங்கம் உதவி செய்யாமைக்கு என்ன காரணம் என்று நினைக்கிறீர்கள்.

பதில்: நான் தமிழனுக இருப்பதால் தமிழன் உலக சாதனைகளை நிலைநாட்ட அனுமதிக்கலாமா என்ற நச்சரிப்பு ஒரு காரணம். அத்தோடு இப்போது விளையாட்டு வீரர்களைப்பற்றி அரசாங்கம் பொருட்படுத்தாமை மற்றவொரு காரணம்.

கேள்வி: உங்களது சாதனைகளுக்கு எத்தகைய ஆதரவு மக்களிடமிருந்து கிடைத்துள்ளது?

பதில்: நான் முதன் முதலாக பாக்கு நீரிணையை நீந்திக் கடந்து திரும்பி வந்த போது தந்தை பெரியவர் செல்வநாயகம் அவர்கள் வல்வெட்டித்துறைக்கு தாமே நேரில் வந்து வாழ்த்தினுர். அண்மையில் நான் நிலைநாட்டிய சாதனையொன்றின் போது தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் திரு. மு. சிவசிதம்பரம் அவர்கள் வந்து வாழ்த்தினுர்கள். கொழும்பு ரோயல் கல்லூரி அதிபர் நான் கேட்டவுடன் நீச்சல் தடாகத்தைத் தந்துதவினுர்கள். நண்பர்களும் உதவி செய்தார்கள். வேறுயாரும் உதவி செய்யவில்லை.

கேள்வி: உங்களது சாதனைகளைக்கொண்டு ஒருவர் தமது வாழ்வில் சாதனைகள் புரிய எத்தகைய வழிவகைகளைக் கையாள வேண்டும் என நீங்கள் கருதுகிறீர்கள்.?

பதில்: போதியளவு பயிற்சி தேவை. உறுதியான உள்ளம் தேவை. நான் ஒரு நாளைக்கு 4 மணித்தியாலங்கள் பயிற்சி செய்கிறேன். போட்டி நெருங்கும் கால கட்டத்தில் சராசரி 12 மணித்தியாலங்கள் பயிற்சி செய்கிறேன்.

கேள்வி: தமிழ் இளைஞர்களுடைய இலட்சியப் போராட்டம் பற்றியும் அவர்களுக்கு நீங்கள் கூறக்கூடிய ஆலோசனைகளையும் கூற முடியுமா?

பதில்: விடாப்பிடியாக நிற்றலும் தொடர்ந்து முயற்சி செய்தலும் அவசியமாகும். தோல்விகளைப்பற்றிக் கவலைப்படக் கூடாது அவற்றை வெற்றிப்பாதைக்குரிய படிக்கற்களாக மாற்றிக்கொள்ள வேண்டும். இன்று இளைஞர்கள் உயிரையும் கொடுக்கத் தயாராகவிருக்கிறுர்கள் அவர்களை வழிநடத்த வேண்டியது தலைவர்களேயாகும்.

கேள்வி: விளையாட்டுத்துறை சம்பந்தமான வெளிநாட்டுப் பிரயாணங்களை மேற்கொண்டிருக்கிறீர்களா...?

பதில்: தனிப்பட்ட முறையில் போயிருக்கிறேன். நேபாளத்திற்குச் சென்று நான் இமயமலையில் ஏற முயற்சித்தேன். 24 மணித்தியாலங்களும் முயற்சித்தேன். முன்பு ஆங்கிலக் கால்வாயை நீந்த எனக்கு எதுவித ஊக்கமும் கொடுக்காதபடியால் எனது முயற்சியைக் கைவிட்டேன்.

கேள்வி: உங்கள் வாழ்க்கையில் மறக்க முடியாத சம்பவம் யாது?

பதில்: வல்வெட்டித்துறையிலிருந்து பாக்கு நீரிணையை நீந்திச் சென்று மறுபடி திரும்பி நீந்தி வந்தபோது கிடைத்த வரவேற்பும், மறைந்த பெரும் தலைவர் அமரர் செல்வநாயகம் அவர்கள் வல்வெட்டித் துறைக்கு நேரில் வந்து என்னைப் பாராட்டியதும் என்னுல் என்றும் மறக்க முடியாதது. அவர் ஒருவரிடம் தான் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு காணப்பட்டது. அவர் ஒரு மகத்தான மனிதர்.

கேள்வி: இலக்கியத்துறையில் நீங்கள் ஈடுபாடு காட்டியதுண்டா?

பதில்: சினிமாக்கதைகள் எழுதியிருக்கிறேன். வேறு கதைகளும் எழுதியுள்ளேன். உதவி புகைப்படப் பிடிப்பாளராகக் கடமையாற்றியிருக்கிறேன். இசைத்துறையில் ஈடுபட்டு பாடல் பாடியிருக்கிறேன்.

கேள்வி: எமது சுடர் சஞ்சிகை வாயிலாக நீங்கள் என்ன கூறவிரும்புகிறீர்கள்?

பதில்: தொடர்ச்சியாக கார் ஓட்டுதல் போட்டியில் ஈடுபட எனக்கு யாராவது உதவி செய்யவேண்டும். நல்ல நிலைமையில் உள்ள காரும் 2 செற் ரயரும் தேவை. இதை ஏதாவது ஒரு நிறுவனம் எனக்குக் கொடுக்க வேண்டும்.

அடுத்ததாக, நவரட்ணசாமியின் மகன் என்னைப் பலவழிகளிலும் இழிவு செய்து பத்திரிகைகளுக்கு அறிக்கை விடுகிருர். இதை அவர் என்மீது கொண்ட காழ்ப்புணர்ச்சியால்தான் செய்கிருர். இதை இனிமேலாவது செய்யாமல் இருக்கவேண்டும், என உங்கள் சஞ்சிகை வாயிலாக கூறிவைக்க விரும்புகிறேன்.

கேள்வி: தமிழ் ஈழத்திற்கு வெளியே வாழும் தமிழர்கள் தமிழ் ஈழத்தில் குடியேற வேண்டும் என்ற கருத்து இப்போது மேலோங்கிவிட்டது. இது பற்றி என்ன கூற விரும்புகிறீர்கள்.

பதில்: என்ருே ஒருநாள் தமிழ் ஈழத்தில் குடியேறத்தான் வேண்டும். குடியேறியே தீரவேண்டும். அத்தகைய நிலை உருவாகும். ஆகவே தமிழர்கள் இதை கருத்தில் கொண்டு தமது உடைமைகளையும் முதலீடுகளையும் தமது தாயகத்திற்கு எடுத்துச்செல்வதில் தயக்கம் காட்டக் கூடாது.

கேள்வி: சுடர், சுதந்திரன் படிக்கும் வாய்ப்புக்கிடைக்கிறதா? அவற்றைப்பற்றிக் கூறமுடியுமா?

பதில்: இரண்டு பத்திரிகைகளையும் படிக்கிறேன். அவை தான் இன்றைய முன்னணி இதழ்கள். மற்றப்பத்திரிகைகள் வியாபாரத்திற்காக வெளிவருகின்றன. இவை தமிழர் நலனைப் பேணவே வெளிவருகின்றன.

வணக்கம்,

பேட்டி கண்டவர்கள்:-

பொன். பூலோகசிங்கம்,
கனக. மோகனகுமார்.

# சுடர் வட்டம்

கோவிலூர் பொன். இராமநாதன், மன்னார் கோவிற் குளம், விடத்தல் தீவு, தமிழ் ஈழம்.

பொழுது போக்கு: தமிழ் ஈழத்துக்காக பாடுபடுவது சுதந்திரன், சுடர், இளைஞர் குரல் படிப்பதும் மற்றும் வானொலியில் தலைவர்களின் த. வி. கூட்டம் கருத்தரங்கு ஆகியன நடந்தால் முன் நிற்திற்பது.

செல்வன் மா. வில்வக்கோன், அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி.

பொழுது போக்கு: பத்திரிகை வாசித்தல், சினிமா பார்த்தல், வானொலி கேட்டல் சஞ்சிகை வாசித்தல்.

எஸ். பி. கிருஷ்ணன், (கண்ணன்) தென்மட்டுவில், சாவகச்சேரி.

பொழுது போக்கு: சிறுகதை, கவிதை, கட்டுரை, சமூகத் தொண்டு.

கதிர். இராஜேஸ்வரன், பொறியியல் பீட மாணவன், எச். எஸ். டீ. ஐ., அம்பாறை.

பொழுது போக்கு: கைப்பந்தாட்டம் விளையாடல், இலக்கிய புத்தகங்கள் வாசித்தல், சிறுகதை எழுதல், தமிழ் ஈழம் பற்றி கலந்துரையாடல்.

கே. எஸ். ராஜா, இல. 42, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

பொழுது போக்கு: நண்பர் தொடர்பு, கதை வாசித்தல், வானொலி கேட்டல், 'சுடரு'க்கு துணுக்கு எழுதுதல்.

சி. ரவீந்திரன், 38, முகாந்திரம் வீதி, கொழும்பு—3.

பொழுதுபோக்கு: இலக்கிய நூல்கள் படிப்பது, நாவல் சஞ்சிகைகள் வாசிப்பது.

செல்வி சித்திரா சிதம்பரநாதன், சேர். பொன். இராமநாதன் வீதி, சுன்னாகம்.

பொழுதுபோக்கு: எழுத்துத்துறை.

எச். மெத்தியேஸ், (வண்ணம் ஆசிரியர்), தேசிய கடதாசி ஆலை, வாழைச்சேனை.

பொழுதுபோக்கு: "வண்ணம்" என்னும் கையெழுத்துப் பத்திரிகை வெளியிடுவது, சிறுகதை, கவிதை எழுதுதல். ஓவியம் வரைவது, இலக்கிய நண்பர்கள் தொடர்பு.

## "சுடர்" வட்டம்

'சுடர்' வாசகர்கள், ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொண்டு கலை, இலக்கிய பரிமாற்றங்களை நடத்தி பயன் பெறுவதற்கு வசதியாக "சுடர் வட்டம்" எனும் பகுதியை ஆரம்பித்திருக்கிறோம்.

இலக்கிய நண்பர்களுடன் தொடர்புகொள்ள விரும்புவோர், தங்கள் முகவரி பொழுது போக்கு விபரங்களை எழுதி, கீழ்க்காணப்படும் முகவரியை வெட்டி அஞ்சலட்டையில் ஒட்டி அனுப்புக.

**'சுடர்' வட்டம்**
194 ஏ, பண்டாரநாயக வீதி,
கொழும்பு—12.

வே. சொர்ணேஸ்வரன், ஏழாலை வடக்கு, ஏழாலை, தமிழ் ஈழம்.

பொழுதுபோக்கு: கவிதை சிறுகதை, கதைப் புத்தகங்கள் வாசித்தல், தமிழீழ அரசு பற்றிய கருத்தரங்கு, செய்திகள் கேட்டல், நண்பர் தொடர்பு.

ச. கதிர் சிவலிங்கம், ("நயனன்") கரிபட்டமுறிப்பு, மாங்குளம்.

பொழுதுபோக்கு: வானொலி, இலக்கிய சஞ்சிகைகள், நாவல்கள் படித்தல், கவிதை எழுதல் நண்பர்கள் தொடர்பு, சுற்றுலா, செவ்வி காணல்' சொற்பொழிவு.

அம்-கௌரிதாசன், 'காலூர்க் கவிஞன்' ஆலையூர்-1, கிண்ணியா

பொழுதுபோக்கு: சிறுகதை எழுதுதல், சிறுகதை, கவிதைகள் வாசித்தல், புகைப் படங்கள் சேகரித்தல், நண்பர், நண்பியர் தொடர்பு.

K. S. நிர்மலானந்தன், 52, ஸ்டேஷன் ரோட், கல்கிசை

பொழுதுபோக்கு: சுதந்திரன், சுடர் போன்ற தரமான சஞ்சிகை, பத்திரிகைகள் வாசித்தல், தனிநாட்டுக் கொள்கை பற்றிய விவாதம், கருத்தெழுதல், பேனா நண்பர் தொடர்பு, வானொலி கேட்டல்.

P. மாணிக்கவாசகம், C/O ஈசன்ஸ் ஸ்டோர்ஸ், 27, பஜார் வீதி, வவுனியா.

பொழுதுபோக்கு: கட்டுரைகள், துணுக்குகள், சிறுகதைகள், எழுதுதல்; இலக்கியப் பரிமாற்றம், நாவல்கள், சஞ்சிகைகள் வாசித்தல்.

ச. ராமச்சந்திரன், சோமராம் தோட்டம், உடுவில்—கிழக்கு, சுன்னாகம்.

பொழுதுபோக்கு: வானொலி கேட்டல், பத்திரிகை, கதைப் புத்தகங்கள், இலக்கிய சஞ்சிகைகள் வாசித்தல், இலக்கிய நண்பர்கள் தொடர்பு, மற்றும் கவிதைகள், பாடல்கள், சிந்தனைத் துணிக்குகள் இயற்றுதல்.

M. D. ஆனந்த பெரேரா, 26/8, குமாரதாஸ பிளேஸ், வெல்லம்பிட்டிய.

பொழுதுபோக்கு: முத்திரை பழைய நாணயங்கள் சேகரித்தல், கதைப்புத்தகம் வாசித்தல்.

# புறநானூற்று இன்பம்



— கலாமோகன் —

அகம் — காதலொழுக்கத்தைச் சொல்லும்.

புறம்—வீரம், கொடை முதலிய ஒழுக்கங்களைச் சொல்லும்.

தமிழ் இலக்கிய உலகில் தனித்துவம் பெற்று விளங்கும் ஓர் புறத்திணை நூலே புறநானூறாகும்.

இது ஒரு தொகை நூல். சங்ககாலப் புலவர்கள் பாடிய நானூறு பாடல்கள் இந்நூலின் கண் தொகுக்கப்பட்டுள்ளன.

புறநானூற்றின் ஒவ்வொரு வரிகளிலும் தமிழர்களின் வீரச்சிறப்பு மிளிர்ந்து கொண்டேயிருக்கின்றது.

தன் மகன் கோழை என அறிந்த தமிழ்த் தாய், தன் முலையை அறுத்தெறிந்த வரலாறும், செருக்களம் நோக்கி விருப்பொடு சென்ற வீரத் தமிழிளைஞர் வரலாறும். தலையை இழந்து, முண்டமான நிலையாலும், உரிமைக்காக வாளேந்தி துடிக்கும் உடலின் வரலாறும், இந்நூலிலே தான் காணப்படுகின்றன.

அத்தகைய வீரரசம் ததும்பும் சில காட்சிகளைக் கீழே காண்போம்.

அதியமான் நெடுமான் அஞ்சி என்னும் தமிழ் மன்னன் செருமுனையில் போர் செய்து கொண்டிருக்கின்றான்.

வாளோடு வாள்மோதும் ஒலிகள் வானைப் பிளக்கின்றன.

பகைவர்கள் பலரது உடலினைக் குத்திக் கிழித்த, இரத்தம் தோய்ந்த வேலுடன் அவன் நின்று கொண்டிருக்கும் போது, ஒருவன் அதாவது மன்னனது அரண்மனைச் சேவகன், மன்னனை நோக்கி ஓடி வருகின்றான்.

"மன்னர் மன்னவா! தங்கட்கு ஓர் ஆண் மகவு பிறந்துள்ளது." என்னும் சேதியைத் தெரிவிக்கின்றான்.

அவ்வளவுதான்!

அதே கோலம்! போர்க்களக் கோலத்தோடு அவன் மாளிகையை நோக்கி விரைகின்றான்.

அப்போது, களத்திற்கு வந்த தமிழ்ப் பெண் புலவர் ஔவையார் அக்காட்சியைக் கண்டு-

"மகவைக் காணச் செல்லும் போதுகூட, இவன் சினம் இவனை விட்டு நகரவில்லை. என்னே! இவன் வீரம்" என வியப்போடு மட்டும் நில்லாது, அக்கோலத்தைச் செய்யுளாக வடிக்கின்றாள்.

"கையது வேலே காலன புனைகழல்
மெய்யது வியரே மிடற்றது பசும்புண்
வட்கர் போகிய வளரினம் போந்தை
உச்சிக் கொண்ட ஊசி வெண்தோடு
வெட்சி மாமலர் வேங்கையொடு விரைஇச்
சுரிஇரும் பித்தை பொலியச் சூடி
வரிவயம் பொருத வயக்களிறு போல
இன்னும் மாறாது சினனே அன்னோ
உய்ந்தனர் அல்லர்இவன் உடற்றி யோரே
செறுவர் நோக்கிய கண், தன்
சிறுவன் நோக்கியுஞ் சிவப்பு ஆனாவே.

(வட்கர் — பகைவர், போந்தை — பனம்பூ
வரிவயம் — புலி)

★

முதுகுடுமிப் பெருவழுதி.

இவன் ஓர் மன்னன். பகைவரோடு போராடி அவர் தம் நிலங்களை யெல்லாம் தனக்கு உடைமையாக்கிக் கொண்டு இரவலர்க்கு அதனைவிடச் சிறந்த பொருட்களை யெல்லாம் வழங்கும் இயல்பினன்,

## "ஓடாத குதிரை"

கிரேக்க பெருமகனாகிய சாக்கரடீஸ், சிந்தனை யுலகில் சதா வாழ்ந்து கொண்டிருந்தான்; பிறருடைய அறிவைத் தூண்டுவதையே தமது பெரும் பணியாகக் கருதிச் செய்து வந்தான், அவன் சில வேளை சிந்தனை யுலகத்திலிருந்து விடுபட்டு ஆறுதல் அடைய விரும்பிய நினைப்பால், ஏதென்ஸ் நகரத்திலுள்ள ஏதேனுமொரு விளையாட்டு மைதானத்திற்குச் செல்வான், அங்கு அமைக்கப்பட்டுள்ள மரக் குதிரை ஒன்றின் மீது உட்கார்ந்து சவாரி செய்வான், "ஓடாத குதிரை" அது. அதை விடாது ஓட்டுவான்.

அனுப்பியவர்:
ச. ஐயாத்துரை.

## 'சுடர்' சந்தா விபரம்

| | | |
|---|---|---|
| ஆறு திங்கள்கள் | — | 6-00 |
| ஒரு ஆண்டு | — | 12-00 |
| இரு ஆண்டுகள் | — | 24-00 |

(தபாற் செலவு உட்பட)

சுடரின் சந்தாதாரர்களாக விரும்புவோர் அதற்கான தொகையை காசுக்கட்டளை அல்லது தபாற் கட்டளை மூலம் பின்வரும் விலாசத்துக்கு அனுப்பி பதிவு செய்து கொள்ளுங்கள்.

நிர்வாகி,
194 ஏ, பண்டாரநாயக்க வீதி,
கொழும்பு-12.

ஒவ்வொரு மாதமும் 'சுடர்' வாசகர் கரங்களில் ஒளிவிட்டுப் பிரகாசிக்கும்.

---

மன்னன் செயல் நெட்டிமையார் என்னும் புலவருக்கு மனச்சங்கடத்தைக் கொடுத்தது.

''மன்னன் நிலத்தை மட்டும் தனக்கு எடுத்துக் கொண்டு, அதை விடச் சிறந்ததை இரவலர்க்குப் பரிசிலாக அளிக்கின்றேன். இதில் மட்டும் மன்னன் பாகுபாடு காட்டுகின்றானே! இதுதான் அவனுடைய அறநெறியோ?''

என எண்ணுகின்றார். புலவருடைய எண்ணமாகையால் அது வீண் போகவில்லை. புறநானூற்றில் இடம் பெறுகின்றது,

''பாணர் தாமரை மலையவும், புலவர்
பூநுதல் யானையொடு புனைதேர் பண்ணவும்
அறனோ மற்றுஇது விறல்மாண் குடுமி?
இன்னா ஆகப் பிறர்மாண் கொண்டு
இனிய செய்திநின் ஆர்வலர் முகத்தே!''

(புலவர் இகழ்வதுபோல புகழ்ந்துள்ளார்)

★

புலியொன்று தூங்கிக் கொண்டிருக்கின்றது.

அதன் மீது ஒரு குருடன் சென்று மோதுகின்றான்.

மோதிய குருடன் தப்புவானா?

எப்படித்தப்பமுடியும்? புலியிடமல்லவா மோதியுள்ளான். இதே போன்று.

சோழன் நலங்கிள்ளியோடு மோதுபவர்களும் தப்பவே முடியாது.

''என்னைப் பணிபவன் எவனோ அவனுக்கு என் ஊரை மட்டுமல்ல உயிரையுமே கொடுப்பேன். என்னை இகழ்பவன் எவனோ அவனுடைய ஊரையே ஒழிப்பேன்.

இந்த வாக்கிலிருந்து. தவறுவேனாயின் என் மனைவியே என்னைப் புறக்கணிக்கட்டும்''

இதுவே நலங்கிள்ளியின் கொள்கை.

அவனுடைய புகழ் மிக, மிக, நீளமானது.

அவன் ஓர் சிறந்த புலவனும் கூட.

தன்னுடைய சிறப்பை ஓர் செய்யுளில் வடித்துள்ளான். அதைக் கீழே காண்க.

''மெல்ல வந்து நல்லடி பொருந்தி
ஈயென இரக்குவர் ஆயின் சீருடை
முரசுகெழு தாயத்து அரசோ தஞ்சம்
இன்னுயிர் ஆயினும் கொடுக்குவென்
இந்நிலத்து
ஆற்றல் உடையோர் ஆற்றல் போற்றாதுஎன்
உள்ளம் எள்ளிய மடவோன் தெள்ளிதின்
துஞ்சுபுலி இடறிய சிதடன் போல
உய்ந்தனன் பெயர்தலோ அரிதே மைந்துடைக்
கழைதின் யானைக் கால்அகப் பட்ட
வன்றிணி நீண்முளை போலச் சென்றவண்
வருந்தப் பொரே என்ஆயின் பொருந்திய
தீதுஇல் நெஞ்சத்துக் காதல் கொள்ளாப்
பல்லிருங் கூந்தல் மகளிர்
ஒல்லா முயக்குஇடைக் குழைகவென் தாரே''

(சிதடன்— குருடன், கழை— மூங்கில்,
குழைக— துவள்வதாக)

★

# உணர்ச்சிக் கவிஞரும் ஈழக்கலம்பகமும்

சு. ஸ்ரீகாந்தா

தமிழகத்திலே தற்போதுள்ள கவிஞர்களில் கண்ணதாசன் எப்படி முதலிடத்தை வகிக்கிறாரோ, அதேபோல ஈழத்திலே காசி-ஆனந்தன் இங்குமுதலிடத்தை வகிக்கிறார். கவியரசிலும் பார்க்க அண்ணளவாக பத்து ஆண்டுகள் உணர்ச்சிக்கவிஞர் அகவையில் இளையவராயுள்ளார். கவியரசு தம்முடைய இளமைக் காலத்தில் எப்படி திராவிடர் இயக்கத்தில் புகுந்து தமிழெழுச்சிப் போராட்டத்தில் தம் இளமைத்துடிப்புள்ள வீரச்சுவை பொருந்திய பாடல்களை இயற்றினாரோ அதேபோல காசியும் தமிழரசு இயக்கத்தில் புகுந்து; தற்போது தமிழர்களின் போராட்டக்களத்தில் முன்னணி வகிக்கிறார். கவியரசு, ஆட்சிபீடத்தின் அடக்குமுறைக்குட்பட்டு பல தடவைகள் ஆர்ப்பாட்டங்கள் செய்து சிறை சென்றுள்ளது போலவே, காசியும் ஸ்ரீலங்கா ஆட்சிபீடத்தினரின் அடக்குமுறைக்குட்பட்டு பல தடவைகள் சிறையை முத்தமிட்டுள்ளார். தற்போதும் சிறைக்கம்பிகளினுள் வீர நெஞ்சுடன், தமிழர் வாழ்வு பற்றி சிந்தித்துக் கொண்டேயிருக்கிறார்.

இத்தருணத்தில் கவியரசுக்குக் கிடைத்த ஒரு வசதி, உணர்ச்சிக் கவிஞருக்கு இலங்கையில் கிட்டவில்லை. அதனை இங்கு குறிப்பிட்டே ஆகவேண்டும். கவியரசு, தி. மு. க. வில் இருந்த காலத்திலேயே (அது எதிர்க்கட்சியாக இருந்தபோதும்) இந்திய அரசினருக்கெதிராக, திரைப்படத்தை ஒரு சாதனமாகப் பயன்படுத்தி, பல எழுச்சி மிக்க இனவுணர்வுப் பாடல்களைப் படைத்தார். இந்திய அரசும் இதுபற்றி தீவிர தடை விதிக்கவில்லை. ஆனால், உணர்ச்சிக் கவிஞருக்கு இவ்வசதி கிட்டவில்லை—கிட்டவும் மாட்டாது. இலங்கையில் தயாராகும் தமிழ்ப் படங்களில், திரைப்படத்தயாரிப்பாளர்கள் துணிந்து, காசியை பாட்டெழுதக் கேட்கவே மாட்டார்கள். இத்துணிவு ஒரு திரைப்படத் தயாரிப்பாளருக்கும் வரமாட்டாது. எனினும், வி. எஸ். துரைராசா போன்ற சில சுயமரியாதை படைத்த பொருளாளர், படந் தயாரிக்கத் துணிந்து, காசியை பாடலெழுத ஒருபொழுது கேட்டாலும், காசி இயற்றும் பாடல்கள் ஸ்ரீலங்கா அரசினரின் கெடுபிடியான தணிக்கை விதிகளை மீறி வெளிவருமா என்பதே கேள்விக்குறி.

கவியரசு, தமிழிலக்கிய வரலாற்றில் ஓர் அழியா இடம் பெற்றுவிட்டார் என்றே கூறலாம். உணர்ச்சிக் கவிஞருக்கும் தமிழிலக்கிய வரலாற்றில் ஒரு தகுந்த அழியா இடம் காத்திருக்கிறது. ஆனால் அதற்கு அவர், யாம் சமர்ப்பிக்கவிருக்கும் ஆலோசனையை ஏற்று அதற்குரிய செயலில் உடனேயே ஈடுபடவேண்டும். யாம் கூறவிருக்கும் ஆலோசனை, காசி ஆனந்தன் ஒரு நீண்ட சிற்றிலக்கியக் காவியத்தை, கவிதையில் வடிக்கவேண்டும். இக்காவியத்தின் கருவையும் கூறிவிடுகிறோம்.

கலம்பகம் ஒன்று காசி ஆனந்தன் பாடவேண்டும். ஈழத்துத் தமிழ் மக்களின் போராட்டத்தையே கருவாகக் கொண்டு, உணர்ச்சிக் கவிஞர் கலம்பகத்தைப் படைக்கலாம். இதன் பெயர், 'ஈழக் கலம்பகம்' என்று அமையலாம்.

கலம்பகம் என்பது, பல்வேறு வகைச் செய்யுட்களும் அகப்பொருட் புறப்பொருட் கூறுபாடுகளும் நிறைந்து, நகை, பெருமிதம், வெகுளி முதலான பல்சுவைகளும் விரவிவரும் சுவை செறிந்த ஒரு சிற்றிலக்கியம். இதுவரை தமிழிலக்கியத்தில் அறியப்பட்டுள்ள கலம்பகங்களின் மொத்த எண்ணிக்கை 62 மட்டுமே. இவற்றில் மிகப் பிரபலமானதும் காலத்தால் முற்பட்டதுமான 'நந்திக் கலம்பகம்' கி. பி. 9ம் நூற்றாண்டில் படைக்கப்பட்டது. ஈழத்துப் புலவர்கள் ஒருவரும் இதுவரை கலம்பகம் பாடவில்லை.

உணர்ச்சிக் கவிஞர் காசிக்கே, 'ஈழக் கலம்பகம்' பாடுவதற்கான முழுத் தகுதியும் திறமையும் துணிவும் உள்ளது. காசியே, ஈழத் தமிழர் போராட்டத்தில் நேரடியாகப் பெரும்பங்கு கொண்டுள்ளார். ஈழத்தின் வேறெந்தக் கவிஞர்களும் இவற்றில் காசிக்கு நிகராகமாட்டார்கள்.

எனவே, சிறையிலே கழிக்கும் காலத்தை உணர்ச்சிக் கவிஞர், 'ஈழக்கலம்பகம்' பாடுவதற்கான முயற்சியில் கழித்தல் வரவேற்கத் தக்கது. கலம்பகம் படைப்பதற்கான மனவுறுதியை காசிக்கு, எல்லாம் வல்ல கலைவாணி படைத்தருளட்டும்! ஈழத்தமிழர் போராட்டமும் தமிழிலக்கியத்தில் பிற்காலச் சந்ததியினர் அறியத்தக்கதாக இடம் பெறட்டும்!

# தெறித்த முத்துக்கள்

★ ‘தம்பியுடையான் படைக்கஞ்சான்’

ஆளுங்கட்சியினரின் அடக்குமுறைப் பயமுறுத்தலுக்கு அண்ணா வைத்த ஆப்பு. பணப்பெருமையோ, பாரம்பரியப் பெருமையோ, பதவிப் பெருமையோ அற்று, அந்தஸ்து வலியும் தோள் வலியுமற்ற நாட்களில் அண்ணாவுக்கு இருந்த ஒரே பெருமிதம் இதுவே.

★ “வெட்டி வா என்றால் கட்டிவரும் தம்பியர்”

தன் தம்பியர் தன் ஆணைக்கு எத்துணை கட்டுண்டவர் என்பதையும், அவர் தம் தாளாண்மை எத்தன்மைத்து என்பதையும், விளக்க விழைந்த அண்ணாவின் பெருமிதப் பேச்சு இது. என்னென்று கூறி முடிக்கு முன்னரே எண்ணெயாக்கித் தரும் தன் தம்பியர், வயலில் சாய்ந்து விட்ட கதிர்களை அறுவடை செய் என அனுப்பினால், அவற்றை அறுவடை செய்து கட்டி வீட்டுக்கும் இட்டு வந்து விடுவார்களாம்.

★ “இப்படை தோற்கின் எப்படை வெல்லும்?”

அறப் போரில் குதிக்குமாறு தன்தம் பியருக்கு ஆணையிட்ட காலையிலும், தேர்தற்களத்தில் குதிக்கத் தீர்மானித்த போதும் அன்று நாடாண்ட கட்சியினர் நகைத்ததுண்டு. ஆணிவேரோடு கருகிவிடுவர் என ஆருடம் கணித்ததுண்டு. தன் தம்பியரது வலிமையை அறிந்த அண்ணாவின் நம்பிக்கையை உணர்த்தும் இவ் வார்த்தைகள் வீர வரலாறு படைத்த சரித்திரச் சான்றோர்களின் கூற்றுக்களை எதிரொலிக்கும். தம்பியர் பட்டாளத்திற்கு இவை தூண்டுகோலென்றால், தானைத் தளபதி அண்ணாவுக்கும் அவையே ஊன்றுகோலாகும்.

★ “மாற்றான் வீட்டுத் தோட்டத்து மல்லிகையும் மணம்கமழும்”

தமது கோரிக்கைகளின் நியாயத்தை, தமது இயக்கத்தின் சாதனைகளை, தன் தம்பியரின் திறமைகளை, கணிக்க மறுத்த மாற்றுக் கட்சியினரிடம் எவ்வளவு நளினத்துடன் கூறினார். மாற்றுக் கட்சிகளின் சாதனைகளையும், திறமைகளையும், நன்மைகளையும் கணிக்குமாறு தன் தம்பியருக்கு அவர் இடித்துரைத்த இங்கிதமும் இதுவே.

★ “என்னிதயம் பரந்தது; எங்கும் செல்லாதீர்கள்; இங்கேயே அனைவரும் குடியிருக்கலாம்”

திரு. ஈ. வி. கே. சம்பத் தம்மை விட்டுப் பிரியத் துணிந்தபோது அண்ணா நெகிழ்ச்சியுடன் கூறிய வார்த்தைகள் இவைகள்.

✦ “நாம் எதிர்க்கட்சியினர், எதிரிக்கட்சியினரல்ல”

பாராளுமன்ற சம்பிரதாயங்களை யிட்டு மயக்கம் கொண்ட ஆளுங்கட்சிக்கு அன்று அண்ணா தந்த விளக்கம் இது.

✦ ‘பணக்காரரைத் தட்டி எடு, பஞ்சையரைத் தட்டிக்கொடு’

முதலமைச்சரான அண்ணா நிதியமைச்சராகவும் பணியாற்றினார். அப்போது வரிவிதிப்புப்பற்றிய தமது கொள்கையை மிகவும் அழகாக ஆங்கிலத்தில் தந்தார். வார்த்தைச் சிக்கனம், வார்த்தைச் சிலம்பம், ‘சோஷலிசத் திட்டம்’ என்று கூறுமற் கூறும் பொருட்செறிவு இத்தனையும் இழையோட எத்துணை நளினத்துடன் எடுத்துரைத்தார்.

அண்ணாவின் குறிப்பேட்டில் இருந்து.

தொகுத்தவர்: நவிண்டிலூர். ந. புவி.

## “அன்பளிப்பு”

நோபல் பரிசை ஏற்படுத்திய கோடிச் செல்வர் அல்பட், தன் ஊழியன் ஒருவரின் திருமணத்திற்குச் சென்றிருந்தபோது, அவனிடம் என்ன‘அன்பளிப்பு’ச்செய்யவேண்டுமென்று வினவினார். அவன் சற்றுத் தயக்கத்துடன் தங்களின் ஒருநாள் வருமானத்தைத் தந்தால் நல்லது என்று கூறினான். உடனே தன்னுடைய ஒரு நாள் வருமானமான ஏழாயிரம் டாலருக்கு ஒரு செக் எழுதிக் கொடுத்து அவனைச் சந்தோஷமடைய வைத்தார்.

அனுப்பியவர்:
ச. ஐயாத்துரை.



# நானும் தேர்தலில் குதிக்கப் போகிறேன்!

**செ. குணரத்தினம்**

‘‘மனே, என்னால இனிமேல் நெருப்புத்திண்டு பாடுபட ஏலாது. தங்கச்சிமார் ரெண்டு பேரையும் ஏதாவது ஒரு இடத்தில கொண்டுபோய்ச்சேத்துடு. எத்தின நாளைக்குத்தான் அதுகள் ரெண்டும் உண்ணுமத்தின்னும என்னோட கிடந்து மா இடிச்சிக் கஷ்டப்படுற! அதுகளெண்டாலும் நல்லா உடுத்து திண்டு சீவிக்கட்டும்! எங்கேயாவது ஒரு இடத்தில கொண்டு போய்ச்சேர்த்துடு!’’—வழக்கம் போல மனைவி கட்டித்தந்த சோற்றுப்பார்சலுடன் வேலைக்குப் புறப்பட்ட எனக்கு நேற்றிரவு அம்மா என்னிடம் சொன்ன இந்த வார்த்தைகள் சட்டென நினைவிற்கு வந்தன. அம்மா என்னிடம் இதைச் சொன்னபோது அசட்டையாகக்கேட்ட எனக்கு இப்போது அந்த வார்த்தைகள் என் நினைவில் பட்டதும் என்னை ஒரு உலுப்பு உலுப்பியது.

என்மீது எவ்வளவு நம்பிக்கையை என் தாயார் மாத்திரமல்ல என் தங்கைகளும் வைத்திருக்கிறார்கள்! அவர்களின் நம்பிக்கைகளுக்குப் பாத்திரமாக என்னால் ஒன்றுமே செய்ய முடியாமலிருக்கிறதே! என்று என்மனம் எனக்குள்ளேயே எண்ணி வேதனைப் பட்டுக்கொண்டிருக்க ‘‘என்ன யோசிச்சுக்கொண்டு நிற்கிறீங்க! இண்டைக்கு வேலைக்குப் போக மனமில்லப்போல’’! என்று என் மனைவி கேட்டதும், நான் தெருவாசற் பக்கம் சைக்கிளைப் பிடித்தபடி சிலையாக நிற்பது நினைவிற்கு வந்தது.

‘‘ஒன்றுமில்லை ராதா!’’ என்று அவளிடம் சொல்லி மழுப்பிவிட்டு விரைவாக சைக்கிளில் ஏறி மறைந்தேன்.

எனக்கிருக்கும் பொறுப்பும், கவலையும் அவளுக்குத் தெரியும். தெரிந்துமென்ன! அவளால் என்னதான் செய்ய முடியும்! மாதா மாதம் சம்பளமாக எடுக்கிற ஒரு சிறிய தொகையில் ஒரு பத்துப் பதினைந்தை அம்மாவிடம் கொடுப்பதை எதிர்க்காமல் அவளுடைய அனுதாபத்தைக் காட்டிக் கொண்டிருக்கிறாள். இதை நான் பெரிதாகவே நினைக்கிறேன். நான் திருமணம் முடியாமல் இருந்திருந்தால்—மனைவி, மக்கள் என்ற பாரங்கள் என் தலையில் ஏறாமல் இருந்திருந்தால் அம்மா, தங்கைகள் என்ற எல்லாச்சுமைகளையும் என் தலைமீது சுமந்து கொண்டு நான் பெறுகின்ற சம்பளத்தைக் கொண்டு ஓரளவு நிம்மதியாக வாழ்ந்திருக்கலாம். முடியவில்லையே! இப்படியெல்லாம் வரும் என்று அறிந்து நான் ஏற்கனவே அம்மாவிடம் சொல்லியும் அவள் கேட்டால்தானே,

‘‘அம்மா, நான் ஒருவன் தான் நம்ம குடும்பத்தில் ஏதோ, ஆண்டவன் புண்ணியத்தால அரசாங்க உத்தியோகம் பார்க்கிறன்! தயவு செய்து நீங்கள் என்னுடைய கலியாணக் கோலத்தைப்பார்ப்பதற்காக என்னை உங்களை விட்டுப் பிரித்து விடாதீர்கள். நான் போன பிறகு நீங்கள் எவ்வளவோ கஷ்டப்பட வேண்டிவரும்! அப்பாவோ உழைப்பில்லாதவர் வயசாளி! நீங்ககூட அடிக்கடி இருமிக் கொண்டிருக்கிறீங்க! அதோட வயது வந்த தங்கைகளும் வாழாவெட்டிகளாக இருக்கிறார்கள். இந்த நிலையில் உங்களுடைய அற்ப ஆசைக்காக என்னைப் பலிகொடுக்காதீர்கள்.’’—இப்படி ஆயிரம் சொன்னேன். அம்மா கேட்டால்தானே! அவள் விடாப்பிடியாக நின்றாள். ‘‘கல்லுக்குள் இருக்கிற தேரைக்கும் ஆண்டவனால் உணவு கொடுக்க முடியுமானால் எங்களையும் அவர் மறக்கமாட்டார். காலமெல்லாம் உன் உழைப்பை நம்பித்தான் நாங்கள் வாழவேண்டுமென்று நினைத்தால் அது எவ்வளவு பெரிய சுயநலமான எண்ணம்! எல்லாம் எனக்குத்தெரியும். அவனின்றி அணுவும் அசையாது!’’ என்று ஏதோ பெரிய தத்துவமெல்லாம் சொன்னாள். அம்மா படித்திருந்தால் கட்டாயம் பெரிய அறிவாளியாக வந்திருப்பாள் என்று அவள் கூறும் அரிய வார்த்தைகளிலிருந்து நான்எண்ணுவதுண்டு.

**இம்மாத பரிசுக் கதை**

எப்படியோ எல்லோரது விருப்பத்தோடும் என் திருமணம் தடல்புடலாக நடந்தேறியது. நான் திருமணம் முடித்து ஒருவருட காலம் என் சம்பளத்தின் அரைவாசிப் பகுதியை அம்மா மறுத்தும் கட்டாயப்படுத்தி அவள் கையில் மாதா மாதம் திணித்து வந்தேன். அதன் பிறகு பிள்ளை குட்டிகளுக்குஅப்பாவாக நான் மாறியதும் அம்மா, தங்கைகளுக்கு கொடுக்க மனமிருந்தும்கொடுக்கமுடியாத தட்டுப்

## மனைவி பிடிவாதம் பிடித்தால்...

சமைக்கத்தெரிந்த மனைவி, 'சமைக்க முடியாது' என்று பிடிவாதம் பிடித்தால் ஏற்படுவது மனவருத்தம் மட்டுமே. ஆனால், சமைக்கத் தெரியாத மனைவி, 'சமைப்பேன்' என்று பிடிவாதம் பிடித்தாலோ மனவருத்தத்துடன் அஜீரணமும் ஏற்படும்.

—ருெபர்ட் ஃபிராஸ்ட்.

பாடு வரத்தொடங்கியது, என்றாலும் என்னால் முடிந்தவரை ஒரு பத்தோ பதினைந்தோ கொடுத்துக் கொண்டுதான் வருகிறேன். இந்தப் பணம் அவர்களுக்கு எந்த மூலைக்குக் காணும்?

இந்த நிலையில்தான் அம்மா நெருப்போடு போராடத் துணிந்து இறங்கினாள். வளர்ந்து பெரியவர்களான எனது தங்கைகள் இருவரும் வெட்கத்தை மறந்து, துக்கத்தை அடக்கி மெல்லிய பட்டுக்கைகளில் காய் எழும்ப உலக்கை பிடித்து மாவிடிக்க, அம்மா அப்பம் சுட்டு குடும்பத்தைக்காக்கத் தலைப்பட்டாள்.

இரண்டு தங்கைகளையும் எஸ். எஸ். சி வரை படிப்பித்து விட்டால்போதும் அதன்பிறகு அவர்கள் கஞ்சித்தண்ணீர் ஊற்றுவார்கள். என்று நம்பி இருவரையும் படிப்பித்தாள். இருவருமே கஷ்டத்தை உணர்ந்து படித்து திறமையுடன் சித்தியடைந்தபோது அம்மா அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை.

"எப்படியாவது அவர்களுக்கு உத்தியோகம் கிடைத்துவிடும். இனிமேல் நான் செத்தாலும் பரவாயில்லை" என்று சொல்லி ஆனந்தக்கண்ணீர் வடித்தாள். எவ்வளவோ மனக்கோட்டைகளைக்கட்டி மகிழ்ந்ததில் எதுவித பிழையுமேயில்லை. ஏனெனில் எஸ். எஸ். ஸி. சித்தியடைந்ததும் ஒரு சதம்கூட எவருக்கும் கொடுக்காமல் எனக்கு வேலைகிடைத்தது உண்மைதானே! அதைப்போல் என் தங்கைகளுக்கும் நொடிப்பொழுதில் வேலை கிடைத்துவிடுமென்று அவள் நம்பினாள். பாவம் அவள். காலம் எவ்வளவு தூரம் மாறிவிட்டது என்பதை எண்ணிப் பார்க்க நேரமில்லாத ஜீவன் அவள், அப்பச்சட்டிவைத்து உழைத்தபணத்தைக்கொண்டு அன்றாடம் சரியாகச்சாப்பிடவே போதாமல் இருக்கும் போது எம்பிக்கும் தும்பிக்கும் அவளால் எப்படிக் கொடுக்க முடியும்? உத்தியோகம் பார்க்கிற என்னாலேயே முடியாமல் இருக்கும்போது அவளால் எப்படி முடியும்?

வருகிற வேலைகளுக்கெல்லாம் மனுப்போட்டு அலுத்துப் போய்விட்டது. எம்பியையும், அரசியல் செல்வாக்குஉள்ளவர்களையும் சந்தித்துச் சந்தித்து சலித்துப்போய் விட்டது. பணம் இருந்தால்தான் வேலை என்ற நிலையில் காலம் ஓடிக்கொண்டிருக்கும் போது அலுப்பும், சலிப்பும் வசதியில்லாதவர்களுக்கு ஏன் வராது

இப்படி அலுத்துப்போன நிலையில் எங்களுக்கு ஓர் எண்ணம் உதயமாகியது. இரு சகோதரிகளில் யாருக்காவது ஒருத்திக்கு திருமணத்தைச் செய்துகொடுத்து விட்டால் குடும்பப்பாரம் ஓரளவாவது குறையுமென்று எண்ணிய நாங்கள் எங்களது சக்திகளைப் பாவித்து கலியாணம் தேடுவதில் மும்முரமாக ஈடுபட்டோம். பாழாய்ப்போன உலகம் எங்குபோனாலும் பணத்தைத்தானே கேட்கிறது.

"எங்களுக்கு ஏழைவீட்டுச் சம்பந்தம் தேவையில்லை" என்று சொல்லியிருந்தால்



நாங்கள் தாங்கியிருப்போம். அதை விட்டுவிட்டு இருபதாயிரமும், ஓட்டு வீடுவளவும் கேட்டால் நாங்கள் எங்கே போவது!" "கண்கெட்ட சமுதாயம்" இப்படித்தான் எங்களின் மனம் திட்டித்தீர்த்தது.

இப்படியெல்லாம் சோகமான முடிவுகளைக்கண்ட பிறகுதான் அம்மா எல்லாப்பாரத்தையும் என் தலைமீது ஒரேயடியாகத் தூக்கி வைத்தாள். என்னால் எப்படிச் சுமக்க முடியும்! நானொரு சாதாரண கிளார்க்கன்தானே! நினைத்தவுடன் பணிவிடைகளை முடிக்க நானென்ன எம்.பியின் வாலா? அல்லது வட்டிக்குப் பணம் கொடுக்கும் குட்டிப்பணக்காரனாக மாறியிருக்கிறேனா! இல்லையே!

எல்லாக் கவலைகளையும் அள்ளிப்போட்டுக் கொண்டு சைக்கிளை வேகமாகச் செலுத்தினேன். தெருவீதியெல்லாம் புதிதாக நியமனம் பெற்ற ஆசிரியர்களும், ஆசிரியைகளும் கவலைகளை மறந்து சிரித்துப் பேசியபடி போய்க்கொண்டிருந்தார்கள். எல்லோரும் எங்கள் கிராமத்தைச் சேர்ந்தவர்களே, அதுவும் எனது தங்கைகளுக்குப்பிறகு இரண்டு மூன்று தடவைகளில் சோதனைகளில் பாஸ் செய்தவர்கள் மாத்திரமல்ல அரசியல் செல்வாக்குள்ளவர்களின் பிள்ளைகள்.

"ஏழைகளின் வாழ்வு எப்போதுதான் மலரப் போகிறதோ! எந்தக்காலம்தான் நமது சமுதாயம் உருப்படப் போகிறதோ!" என்று எனக்குள்ளேயே எண்ணி வருத்தப்பட்டுக்கொண்டு காரியாலயத்தினுள் சென்று கதிரையில் அமர்ந்துகொண்டேன். என்னால் வேலை செய்யவே முடியவில்லை.

லீவைப்போட்டுக்கொண்டு வீட்டிற்குப் போகலாம் என்ற யோசனை எழுந்தது, "அதனால் பிரச்சினைகள் தீர்ந்துவிடப் போவதில்லை" என்று சட்டென என் மனம் சொன்னதும் கதிரையில் இருந்தபடியே எனக்கு எதிரேயிருந்த காரியாலய



# ஒரு கவிஞனின் காதல்

திருமலை-இராசரத்தினம்

இன்னிசையில் மழைபொழியும் இளம்குயிலே
ஏழிசையால் எனையிழுத்த பைங்கிளியே
பண்ணிசையில் 'பதநிச'வைப் பாடியெந்தன்
பார்வையினை மயங்கவைத்த பொன்மயிலே
உன்னிசையில் நான் மயங்கி நின்றதுவும்
ஊரறிய உன்பின்னால் திரிந்ததுவும்
கண்ணசைவில் பதிலுரைப்பாய் என்றுனது
காதலுக்காய் இரங்கியதும் கதைகளல்ல.

மொட்டவிழ்ந்த முல்லையென முத்தாய்ப்பு வைத்ததுவும்
முழுநிலவின் கோலமென முகம்காட்டி நின்றதுவும்
கட்டவிழ்ந்த நின்கூந்தல் காற்றசைவில் ஆடியதும்
காணாத வேளையிலென் கண்ணிரண்டும் வாடியதும்
'வெட்டென'வோர் புன்னகை நீவீசிச் சென்றதுவும்
வீதிகளில்; ஒழுங்கைகளில் நம் காதல் வளர்ந்ததுவும்
பட்டமரம் போல இன்று பாழாகிச் சாய்ந்ததுவும்
பாடலில் சொல்லயிந்தப் பாவியால் இயலாதே.

நெஞ்சிலே நீயன்றோர் நெருப்பினையிட்டதால்
நித்தமும் நானுன்னால் பித்தனாகினேன்
பஞ்சிலே வைத்ததோர் நெருப்பினைப்போலவே
பாவையுன் பார்வைக்காய் பாதையில் வாடினேன்
அந்தியும்; மாலையும் அடுத்துவரும் வேளையும்
சங்கீத சாலையில் சந்திக்கத்தேடினேன்
இந்தவோர் கவியிலும்; எழுதியயாவிலும்
என்னிதய வாணியே உன்னையே பாடினேன்.

வெள்ளமெனத் தமிழ் சொற்கள் வேகமாய் வந்ததுவும்
மேடையிலே நின்றெனது மெய்சிலிர்க்கப் பேசியதும்
அள்ளியே அவையோர்கள் வாழ்த்துக்கள் வீசியதும்
ஆருயிரே இவையுனது அன்புக்கு நிகராமோ?
இலக்கியத்தை; அரசியலை என்னுயிராய்க் கொண்டாலும்
ஈழத்தின் மேடையதில் எங்கு நான் நின்றாலும்
இலட்சியத்தின் இறுமாப்பில் சிறைக்கதவைத் தொட்டாலும்
ஏந்திழை நின் எழிலுருவை எந்நாளும் மறப்பேனோ?

நண்பனைப்பார்த்தேன். அப்போது அவன் என் பக்கம் திரும்பி ஒரு கடிதத்தை படித்துப்பார்க்கும்படி நீட்டினான். அவன் முகத்தில் மகிழ்ச்சி தாண்டவமாடியது.

கடிதத்தை மெல்லப் பிரித்துப்பார்த்தேன். அதிலே அவனுடைய தங்கை ஆசிரியையாகத் தெரிவுசெய்யப்பட்டு இன்று முதல் பாடசாலைக்குப் போவதாக எழுதியிருந்தாள், என் மன நிலை எப்படி இருக்கும்? "கொங்குருச்சுலேசன்" என்று பாராட்டுத் தெரிவித்துவிட்டு "உனது தங்கை எப்படி எடுபட்டாள்?" என்று நண்பனை விசாரித்தேன். "எங்க சொந்தக்காரர்தான் எம். பி. அதுதான் லேசாக இடம் கிடச்சிப் போச்சி" என்றான்.

எனக்கு எதிலுமே மன மோடவில்லை. "இந்த நாட்டில் நானும் ஒரு. எம். பியாக வேண்டும்! அல்லது ஒரு லட்சாதிபதியாக வேண்டும். அப்போது தான் நானும் என் சகோதரிகளையும் எனக்கு வேண்டியவர்களையும் வேலையில் சேர்ப்பிக்கலாம். நாமும்தான் தவறாமல் வாக்களித்து எம். பியை பாராளுமன்றத்திற்கு அனுப்பி வைக்கிறோம். அப்போதெல்லாம் நாங்கள் ஒரு சதமும் எவரிடமிருந்தும் எதிர்பார்க்கவில்லை, ஆனால் எம்.பியானவுடன் எங்களிடமிருந்து இவர்கள் பணத்தை எதிர்பார்க்கிறார்களே! இதுதானா நாங்கள் செய்த உதவிக்குச் செய்யும் கைமாறு? எம்.பிமார்களுக்கும், மந்திரிகளுக்கும் இந்த உத்தியோகம் கொடுக்கும் வேலையை ஏன்தான் இந்த அரசாங்கம் கொடுத்ததோ தெரியவில்லை? சேச் சே! இதெல்லாம் நமக்கெதற்கு? நான்தான் எம்.பியாகப் போகிறேனே! நாளைக்கு நானும் இப்படி பணம் வாங்கி கோடிசீமானாக வாழலாமே!" தாங்காத வேதனையால் என் மனம் இப்படியெல்லாம் எண்ணிப்பார்த்துக்கொண்டது.

என்னைப் பொறுத்தளவில் நான் எம்.பியாவது நடக்கக்கூடிய காரியமில்லை. ஆனாலும் என் தங்கைகளின் நிலையையும், அவர்களைப்போன்ற வசதியில்லாதவர்களின் நிலைகளையும், இந்த நாட்டில் தெரிந்தும் தெரியாமலும் நடக்கின்ற அவல நிலையையும் எண்ணியெண்ணிப்படுகின்ற வேதனையைத் தீர்த்துக்கொள்வதற்கு நானெடுத்த முடிவுதான் அடிக்கடி "நான் எம்.பியாகப் போகிறேன்" என்று நினைத்துப்பார்த்துக்கொள்வது, அப்படி நினைத்துப்பார்க்கும்போது என் நெஞ்சம் கொஞ்சநேரம் வேதனைகளை மறந்து நிம்மதிபெறுவதை நான் உணர்கிறேன்.

இந்த நினைவுகளில் கந்தோர் நேரம் போனதே எனக்குத் தெரியவில்லை. நண்பர்கள் எழுந்து நின்றதும்தான் எனக்குச் சுயநினைவு வந்தது. மெதுவாக எழுந்து சென்று சைக்கிளை எடுத்துக்கொண்டு மீண்டும் வீடு நோக்கி வருகிறேன். அப்போதும் அம்மா சொன்ன "மகனே, என்னால இனிமேல் நெருப்புத்திண்டு பாடுபட ஏலாது. தங்கச்சிமார் ரெண்டுபேரையும் ஏதாவது ஒரு இடத்தில கொண்டு போய்ச்சேர்த்துடு!" என்ற வாசகங்கள் நினைவிற்கு வருகின்றன. உடனே "நானும் எம்.பியாகப் போகிறேன்!" என்ற எண்ணம் என் மனதில் எழுந்து கவலைகளை மறைக்கின்றன.

(யாவும் கற்பனையல்ல)

# கொள்கை வேண்டும்

இதயத்தில் நல்லெண்ணம் பூக்க வேண்டும்
இகமெல்லாம் போற்றிடவே வாழவேண்டும்
பதவியிலே மோகங்கள் நீங்கவேண்டும்
பண்புடனே வாழ்ந்துயர்வு காண வேண்டும்
கதியற்ற ஏழைகளின் கண்ணீர் தன்னை
கருணையுடன் போக்கிடவே வேண்டும்; வாழ்வில்
உதவுகின்ற பண்பென்றும் இருக்க வேண்டும்
உத்தமனாய் வாழ்ந்துயர்வு காண வேண்டும்.

சந்தர்ப்ப வாதங்கள் நீங்கி என்றும்
சத்தியமே வாழ்வினிலே ஓங்க வேண்டும்
சொந்தமென்றும் பந்தமென்றும் சலுகை செய்யும்
சுணைகெட்ட "நீதி" முறை மாள வேண்டும்
நிந்தனைகள் செய்யாது வாழ வேண்டும்
நீதியதன் பக்கலிலே சேர வேண்டும்
சிந்தனையில் எப்போதும் தூய்மை வேண்டும்
சீரியநற் கொள்கையிலே நிற்க வேண்டும்.

எம். எம். அமீர்அலி,
காத்தான்குடி—2.

# எலுமிச்சைப் பழம் ஓர் மருத்துவக் கனி

எலுமிச்சம் பழத்தை மருத்துவக் கனி என்றும் அழைக்கலாம்; அது குணமாக்கும் பல நோய்களின் விபரத்தை இங்கு தருகிறோம்.

**தேள்கடி விஷத்திற்கு**

எலுமிச்சம் பழ விதைகளையும், உப்பையும் கலந்து அரைத்துக் குடித்து விட்டால் தேள்கடி விஷம் இறங்கி விடும். கடிவாயிலில் எலுமிச்சைப் பழ ரசத்தையும் உப்பையும் கலந்து போட்டால் கூட நலம் விளையும்.

**ஈக்கள், எறும்புகள் மொய்த்தலுக்காக**

எலுமிச்சம் பழத்தை நன்றாக வெயிலில் காய வைத்து, சிறிதளவு தண்ணீரில் கலந்து தெளித்து விட்டால் ஈ, எறும்புகள் மொய்ப்பதைத் தவிர்க்கலாம்.

**மூட்டைப் பூச்சிகளுக்கு**

எலுமிச்சப் பழத் தோல்களை கந்தகத்தோடு கலந்து புகை போட்டால் மூட்டைப் பூச்சிகள் மறைந்துவிடும்.

**பற்களுக்குத் தூய்மை**

வாதாம் கொட்டைத் தோலை உரித்தெடுத்து நன்றாக மை போல அரைத்துக் கொண்டு, அதில் எலுமிச்சம் பழரசத்தைக் கலந்து பல் தேய்த்துக் கொண்டு வந்தால் பற்கள் முத்துக்கள் போன்று ஒளிவிட்டு பிரகாசிக்கும்.

**ஈறுகளில் இரத்தம் வடிதல்**

எலுமிச்சம் பழ ரசத்தை தண்ணீரில் கலந்து வாயில் ஊற்றிக் கொப்பளித்துத் துப்ப இரத்தம் வடிவது நிற்கும்.

**வாய்நாற்றம்**

¼ லிட்டர் பன்னீரில் 2 கரண்டி எலுமிச்சம் பழ ரசத்தையும், சிறிதளவு தண்ணீரையும் கலந்து, அதிகாலையில் எழுந்தவுடன் வாய் கொப்பளிக்கவேண்டும். இதனால் வாய்ப்புண், ஈறு வீக்கம் முதலியன குணமாகும். வாய் துர்நாற்றம் நீங்கும்.

**தொண்டை வியாதி**

எலுமிச்சம் பழ ரசத்தை தண்ணீரில் கலந்து குடித்தால் தொண்டை எரிச்சல், தொண்டை வற்றல் தொண்டை அடைப்பு, தொண்டை கரகரப்பு, முதலியவற்றிற்குப் பயன்கிட்டும்.

**மூக்கில் இரத்தம்**

மூக்கில் இரத்தம் வடிகிற சமயத்தில் சிறிதளவு எலுமிச்சம் பழ ரசத்தை மூக்கினில் தடவி விட்டால் இரத்தம் வடிதல் நின்று விடும்.

**காது நோய்களுக்கு**

காதுகளில் அழுக்குப் படிந்திருந்தால் எலுமிச்சம் பழ ரசத்தை 1/8 பங்கு கிளிசரினுடன் கலந்து காதுகளில் தினம் இருமுறை போட்டுக்கொண்டு வரவும்.




**சீழ்வடிதலுக்கு**

எலுமிச்சம் பழ ரசத்தை நீலநிற பாட்டிலில் விட்டு நான்கு தினங்களுக்கு வெயிலில் வைத்து எடுத்தவுடன், ரசத்திற்கு சரிபங்கு நல்லெண்ணெயையும் கலந்து, சீழ் வடிகின்ற காதில் இருதுளிகள் மூன்று தடவைகள் போட்டுக் கொண்டு வரவும்.

**கண்பார்வை மங்கல்**

தினமும் எலுமிச்சம் பழ ரசத்தில் மூன்று துளிகளை கண்களில் இரவில் படுக்கைக்குப் போகும் போது போட்டுக் கொண்டு வந்தால் மங்கல் நீங்கி பார்வை நன்றாகத் தெரியும்.

**கண்களில் கக்கட்டி**

நாலு பங்கு பசுவின் வெண்ணெயில் இரண்டு பங்கு எலுமிச்சம் பழ ரசத்தைக் கலந்து, தினமும் இரவில் கண்களில் ஒன்று அல்லது இரண்டு துளிகள் போட்டுக் கொண்டு வரப் பெற்றால் கண்களில் கக்கட்டி கட்டலிலிருந்து நிவாரணம் அடையலாம். அத்துடனும் வெங்காயத்தைத் தட்டி ரசத்தை எடுத்து வெண்ணெய், எலுமிச்சை ரசங்களுடன் கலந்து கண்களுக்குப் போட்டால் கூடநன்மை விளையும்.

**தலையில் பேன்கள்**

வெள்ளைப் பூண்டை அரைத்துக் கொண்டு எலுமிச்சப் பழ ரசத்தை விட்டுக் கலந்து தலையில் தேய்த்துக் குளித்துக் கொண்டு வந்தால் பேன்கள் இருக்காது.

அனுப்பியவர்:
செல்வி சா. யோகமலர்,
கிரான்.

மணிக்கதை

# 'ஒற்றுமை'

அண்ணனுக்கும் தம்பிக்கும் இடையே பகைமையை ஊட்டிவிட்டார்கள் சில சுய நலமிகள். அன்று முதல் தொட்டது சனி, வேண்டாத பெண்டாட்டி கைபட்டால் குற்றம் கால் பட்டால் குற்றம் என்பதுபோல் எடுத்ததற்கெல்லாம் தம்பிமேல் எரிந்து விழுந்தான் அண்ணன். காரணமில்லாமல் தம்பியை இம்சைப்படுத்தினன். அவன் உடைமைகளைத் துவம்சம் செய்தான். காலத்துக்குக் காலம் தவருமல் கொடுமை நடந்தது.

"என்னல் இந்தக் கொடுமையைத் தாங்க முடியாது நான் தனியாக வாழப்போகிறேன்" என்ருன் தம்பி.

தம்பியின் கையை வெட்டினன் அண்ணன். இரத்தம் ஆருகப் பெருகியது.

நாயகம் மாஸ்டரும் அவருடைய கூட்டாளிகளும் வந்தனர். அவர்கள் ஊருக்குப் பெரிய மனிதர்கள், உபதேசம் செய்பவர்கள்;

"பிரிவினை கூடாது ஒற்றுமை முக்கியம்' என்று தம்பிக்கு உபதேசம் செய்தார்கள் அவர்கள்.

"ஐயா, உதைபட்டவனுக் குத்தான் உபதேசம் செய்கிறீர்கள், உதைக்கிறவனுக்கு எதுவும் கூறுகிறீர்கள் இல்லையே" என்ருன் தம்பி.

"அவன்தான் ஒற்றுமையாக இருப்போட என்கிருனே அப்புறம் என்ன அவனுக்குப் புத்திமதி?"

"வாயால் ஒற்றுமையைப்பற்றிப் பேசுகிருன். கையால் என்ன செய்கிருன் பார்த்தீர்களா? அதை நிறுத்துவதற்கு ஏதாவது செய்வீர்களா?".

"அதெல்லாம் எங்களுக்குத் தெரியாது. எங்களுக்கு ஒற்றுமைதான் முக்கியம்".

"ஆளையே 'குளோஸ்' ஆக்கப் பார்க்கிருன். இந்த ஆபத்திலிருந்து என்னைப் பாதுகாப்பதற்கு ஏதாவது உதவி செய்வீர்களா?

"அதெல்லாம் எங்களுக்குத் தெரியாது. எங்களுக்கு ஒற்றுமைதான் முக்கியம்"

"ஒன்ருக வாழவும் வழி வகுக்கிறீர்கள் இல்லை. தனியாக வாழவும் விடுகிறீர்கள் இல்லையா இது என்ன நியாயம்?"

"நியாயத்தைப்பற்றி எங்களிடம் பேசுகிருன். உதைடா அவனை" என்ருர்கள் பெரிய மனிதர்கள்.

பெரிய மனிதர்கள்+அண்ணன் சேர்ந்து தம்பியை உதைக்கத் தொடங்கினுர்கள். மூர்ச்சையானுன் தம்பி. மூர்ச்சை தெளிந்த தம்பி தனக்குள்ளே கூறிக்கொண்டான். "தனியாக வாழ்வதைத் தவிர வேறுவழி இல்லை."

— மணி.

## "கருங்காலிகள்" கதைக்கு ஓர் ஆட்சேபம்

கடந்தமாத சுடர் இதழில் கரவலூர், எஸ். ஜெகநாதன் எழுதிய "கருங்காலிகள்" என்னும் சிறுகதையை வாசித்தோம். சமூக அடிமைத்தனத்தைச் சாடும் கதையென்று குறிப்பிடப்பட்டிருந்தது. இது சமூக அடிமைத்தனத்தைச் சாடவில்லை; நிச்சயமாக எண்ணெய் ஊற்றி வளர்க்கிறது. இரு உயர் சமூகங்களை ஒப்பிட்டு எழுதியிருக்கிருர். கடற்தொழிலாளருக்குப் பரிந்து எழுதுவது போல அவர்களைக் கிண்டல் செய்திருக்கிருர். கடற்தொழிலாளரின் வாழ்க்கை முறையையும் பேச்சு வழக்கையும் வேண்டுமென்றே கொச்சைப்படுத்தியிருக்கிருர்.

இதனை நாம் கண்டிக்கிருேம். "கருங்காலிகள்" கதையில் கடற்தொழிலாளர் சமூகத்தைச் சேர்ந்த இளம் பெண் ஒருத்தி சோரம் போவதாகவும் அவளின் உறவினர் சிலர் எதிர்த்துப் பேசத் திராணியின்றி இருப்பதாகவும் எழுதியிருக்கிருர். ஆங்கிலேயருக்கு அடிபணியாததால் அவர்களால் பலவகையிலும் பழிவாங்கப்பட்டு, மானமே பெரிதென்று ஆழ்கடலில் உயிரைத் துச்சமென மதித்து உழைத்துவாழும் எம்மைக் கொதிக்க வைத்திருக்கிறது இச் சிறுகதை.

ஐ. அமிர்தலிங்கம்,
உபசெயலாளர்,
கண்ணகி படிப்பகம்,
மயிலிட்டி.

---

## பிராமணம் பற்றி பிற மதங்கள்

"பிறப்பினுல் ஒருவன் பிராமணன் ஆவதில்லை. யாரிடம், சத்தியமும் நேர்மையும் இருக்கிறதோ அவனே பிராமணன்."

—புத்த மதம்,

"மொட்டை அடித்துக் கொள்வதனுல் ஒருவன் பிக்கு ஆகிவிடமாட்டான். ஓம் என்று கத்துவதால் பிரமாணன் ஆகிவிட மாட்டான். காட்டிலே வசிப்பதனுல் முனிவன் ஆகிவிட மாட்டான். மரவுரி தரிப்பதனுல் ரிஷி ஆகிவிட மாட்டான்."

—சமண மதம்.

"கருணையே பஞ்சாய், திருப்தியே இழையாய் சகிப்புத்தன்மையே முடிச்சாய், சத்தியமே முறுக்காய் உள்ள ஒன்றுதான் ஆத்மாவுக்கு பூணூலாக இருக்க உகந்தது. அத்தகைய பூணூலை நீ அணிந்தவனுக இருப்பின் எனக்கும் அதைப் போடு."

—குருநாணக்—சீக்கிய மதம்.

தொகுப்பு: "கண்ணன் தென்மட்டுவில்"



# தலைவியின் துயரம்

-முல்லைமணி-

தலைவன் அவளைத் திருமணஞ் செய்த நாளில் ஓர் உறுதிமொழி கூறியிருந்தான். 'எக்காரணம் கொண்டும் உன்னைப் பிரியமாட்டேன்' என்று சத்தியம் செய்திருந்தான். தலைவனின் கூற்றை அவள் நம்பினாள். இல்லறம் இனிது நடைபெறுகின்றது. சேர்த்து வைத்திருந்த பொருள் கரைந்து விட்டது. செல்வக் குடும்பத்திலே பிறந்தவள் தலைவி. அவளின் பெற்றோர் தேவையான பொருளைக் கொடுத்து தவச்சித்தமாக இருக்கின்றார்கள், ஏன்? அவள் விலையுயர்ந்த பொன்னாலான அணிகலன்களை அணிந்திருக்கிறாள். அவற்றையிழக்கவும் அவள் தயார். ஆனால் தலைவன் தான் அதற்கு இசையவில்லை. பொருள் தேடவேண்டும். பொருள் தேடப்போவதாயின் தலைவியைப் பிரிந்துதான் ஆக வேண்டும். அந்த நினைப்பை எப்படித் தலைவியிடம் கூறுவது? அவள் எப்படி அதற்கு உடன் படுவாள்? அவளிடம் நேரே சொல்லத்தயங்குகிறான். தோழி மூலமாக இச் செய்தியை எப்படியோ கூறிவிடுகின்றான். தலைவி துடிதுடித்துப் போகிறாள்.

“நீங்கள் என்னை விட்டுப் பிரியப் போகிறீர்களாமே!” நேரடியாகக் கேட்கிறாள் அவள்.

“ஆமாம். வேறு வழியேயில்லை. பிறர் உழைப்பிலே வாழமுடியாது; அப்படி வாழ்வது பெரும் இழுக்கு. உனக்குத் தெரியும் தானே! பொருளில்லார்க்கிவ்வுலகம் இல்லை; பொருள் இல்லையாயின் அறம் செய்ய முடியாது; செல்விருந்தோம்பி வருவிருந்து காத்திருக்க முடியாது. இல்லற இன்பங் கூடப் பொருள் இல்லாதவர்க்குத் துன்பமாய்த்தான் முடியும். நான் உன்னைவிட்டுப் பிரிந்தால் கூட விரைவிலே வந்துவிடுவேன். பிரியினும் தரியேன்.” இப்படிச் சமாதானம் கூறுகின்றான் அவன்.

உள்ளத்துத் துயரத்தையெல்லாம் அடக்கிக்கொண்டு ஒருவாறு சம்மதிக்கிறாள் அவள். விரைவில் வருவதாகத் தானே தலைவன் கூறுகின்றான். எவ்வளவு விரைவில் என்று அறிய அவளுக்கு ஆவல்;இன்னுமொரு வினாவைத் தொடுக்கிறாள்!

“விரைவில் என்றால்... எப்பொழுது திரும்புவீர்கள்?” கலண்டரும் கடிகாரமும் இல்லாத காலம் அது. போக்குவரத்து வசதிகளும் இல்லை. இதனால் 'இன்னமாதம் இத்தனையாம் திகதி'யென்று வரையறுத்துக் கூறமுடியாது. பருவ காலத்தைக் கொண்டே காலத்தைப் பாகுபடுத்தும் வழக்கம் இருந்தது.

“கார்காலம் வந்ததும் வருவேன்” என்கிறான் அவன்.

“அப்படியா? கார் காலம் என்றால் எப்படியிருக்கும்?”

“இதுகூடத் தெரியாதா? நீ இப்பொழுதும் பேதைச் சிறுமியாகத்தான் இருக்கிறாய். என்னைத் திருமணம் செய்த நாளில் நீ வைத்து விளையாடிய பந்தையும் கிளியையும் கூட உன்னுடன் கொண்டுவந்தாயே அந்தச் சிறுமியாய்த்தான் இப்போதும் இருக்கிறாய். கார் காலம் என்றால் மழைக்குரிய அறிகுறிகள் தோன்றும்; மின்னும்; இடிக்கும்; முல்லை மொட்டுக்கள் விரியும்”.

இப்படிக் கூறிவிட்டுத் தலைவன் பொருள் தேடப் போய் விடுகிறான். தலைவன் செல்லும் வழி மிகவும் கொடியது. பாலைவனத்தினூடாகத்தான் செல்ல வேண்டும். அங்கே வசிப்பவர்கள் வில்லேர் உழவர்கள். அவர்கள் வில்லை ஏராக உபயோகித்து உழுது பொருள் சேர்ப்பவர்கள்.பொருள் தேடி வருபவர்களைக் கொன்று அவர்களின் பொருளை அபகரிப்பவர்கள். இவற்றையெல்லாம் தலைவி அறிந்திருந்தாள். இதனால் பிரிவுத் துயர் பெருகுகின்றது. தலைவனுக்கு என்ன நிகழுமோ என்று அஞ்சுகின்றாள். அவள் தலைவனை நினைந்து நினைந்து உருகுகின்றாள். உருகி அவள் உடம்பு இளைத்துவிடுகிறது.

* * *

மின்னல் கண்ணைப் பறிக்கிறது; இடி இடிக்கிறது; முல்லை மொட்டுக்கள் விரிகின்றன. ஆனால், தலைவன்தான் வரவில்லையே! தலைவி கலங்குகின்றாள். கண்ணீர் வடிக்கிறாள், மின்னலும் இடியும் கொலைப் படையாக அவளுக்குத் தோன்றுகின்றன.

தோழி வருகிறாள்; தலைவியைக் காண்கிறாள். தலைவியின் வருத்தத்திற்குக் காரணம் தெரியாதா, என்ன? என்றாலும் தெரியாதவள்போல் கேட்கிறாள்.

“என்னருமைத் தோழியே, ஏன் இப்படிக் கலங்குகின்றாய்.”

“அவர் வரவில்லை அது தான்...”

“எப்பொழுது வருவதாகக் கூறினார்?”

“கார் காலத்தில் வருவதாகக் கூறிச் சென்றார். கார் காலம் வந்து விட்டது; அவரைத்தான் காணேன்...”

“கார்காலம்வந்தது என்று எப்படித் தெரியும்?”

# வழிகாட்டும் ஒரு விழா

(திராட்சையூரான்)

எந்த ஒரு திருவிழாவிற்கும் உள்ளார்ந்த அர்த்தம் இருக்கிறது. இதனை அறியாத பலரும் வெறும் வேடிக்கைகளிலே மூழ்கி திருவிழாக்களின் புனிதத்தன்மையினைக் கெடுத்து விடுகின்றனர்.

இந்த நத்தார்ப் பண்டிகை அன்பையே அடிப்படையாகக் கொண்ட ஒரு விழா. அன்பு மனம் மட்டும் எம்மிடம் இல்லாமல் நாம் எத்துணை பெரிய அளவில் இந்த விழாவைக் கொண்டாடினாலும் அதனால் எவர்க்கும் எவ்வித பயனும் இல்லை.

நத்தாரை நாம் வருடத்தில் ஒரு நாள் மட்டும் கொண்டாடினால் மட்டும் போதாது. வருடம் முழுவதும் நாம் நத்தாரைக் கொண்டாட வேண்டும் அதுதான் உண்மையான நத்தார். வருடம் தோறும் பட்டாசுகொளுத்தி பட்டாடை உடுத்து, விருந்து வைபவங்களை நடத்திக் கொண்டாடுவது மட்டும் நத்தார் அல்ல. நாலு பேர் மத்தியிலே நாமும் கௌரவத்துடன் நடக்க வேண்டும் என்பதற்காகக் கொண்டாடப்படும் நத்தார் தான் இது. ஏழ்மை-அன்பு மனம் இதுதான் நத்தார் காட்டும் பாதை. இப்பாதையிலே வீறு நடை போடுவதுதான் நத்தார். இப்பாதையில்தான் அன்பு மனங்களை, ஏழை உள்ளங்களை நாம் சந்திக்க முடியும்.

இத்தகையோரையே அண்ணல் யேசுவும் தேடி இவ்வுலகிற்கு வந்தார். ஏழை மனது கொண்ட ஆயர்களுக்கே தமது வருகையை முதலில் கூறினர். அவர் இவ்வுலகில் வந்த போது வான தூதர்கள்நல்ல மனம் கொண்டவர்களுக்கு அமைதி என்ற செய்தியினையே அறிவித்தனர்.

நத்தாரை நாம் நலமுடன் கொண்டாட நமக்கு வேண்டியது பட்டாடை புத்தாடைகள் அல்ல. கண்ணைக் கவரும் அர்த்தமேயில்லாத வாழ்த்து அட்டைகள் அல்ல, தித்திக்கும் தீன் பண்டங்கள் அல்ல. 'உள்ளக் கமல மடி உத்தமனர் வேண்டுவது'என்பதற்கொப்ப நமது கள்ளமில்லா உள்ளத்தையே இறைவன் விரும்புகிறார்.

அண்மையில் எமது நாட்டில் ஏற்பட்ட பெரும் புயலாலும் வெள்ளத்தினாலும் பல்லாயிரக் கணக்கான மக்கள் அகதிகளாக்கப்பட்டுள்ளனர். சமுதாயத்தில் அவர்களும் வாழ வேண்டும் தமது துயரைப் போக்கவேண்டும். நம் சகோதரர்களான அவர்களும் விழாவைக் கொண்டாட வேண்டாமா? அவர்களுக்கும் உதவி ஆறுதல் அளிப்போம். இதுவே அனைவர்க்கும் அர்த்தமுள்ள நத்தார் விழாவாக மாறும்.

---

வாசக அன்பர்களுக்கு எமது நத்தார், புது வருட வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

---

"ஏன் எனக்குத் தெரியாதா? மின்னலும் இடியும் மழையும் கார் காலத்தைக் சுட்டுகின்றன. முல்லை மொட்டுக்கள் கூட மலர்ந்துள்ளன. இவற்றைவிடவேறுஅத்தாட்சிகள் வேண்டுமா?"

கலகலவென்று சிரிக்கிறாள் தோழி. அவளே கூறுகின்றாள்:

"அடிபேதைப் பெண்ணே, இது காலமல்லாத காலத்தில் பெய்தவம்பு மழை. இதைக் கண்ட முல்லை கூட ஏமாந்து விட்டது. உண்மையான கார் காலம் இன்னும் வரவில்லை. கார்காலம் இங்குமட்டுமா வரும்? தலைவர் சென்ற ஊரிலும் கார் காலத்தின் அறிகுறியே தோன்றுமல் இருக்குமா? உன்னுடைய தலைவர் கொடுத்த வாக்கை மீறியுள்ளாரா?"

"எப்போதும்மீறியதில்லை"

"கார்காலத்தில் வருவதாகக் கூறியவர் நிச்சயம் வந்தே திருவார். அவர் வரவில்லை;இதிலிருந்து கார்காலம் வரவில்லை என்பதை ஏன்தான் நீ அறியவில்லையோ?"

தோழியின் கூற்றால் சமாதானம் அடைகிருள் தலைவி. ஐந்திணை ஐம்பது என்னும் நூல் சங்க மருவிய காலத்தைச் சேர்ந்தது; ஐம்பது வெண்பாக்களாலானது.மாறன்பொறையனார் இந்நூலை இயற்றினர். மேலே குறிப்பிட்ட நிகழ்ச்சிகள் முல்லைத் திணையில் வருகின்றன.

மின்னும் முழக்கும்
இடியுமற் றின்ன
கொலைப்படை சாலப்
பரப்பிய் முல்லை
முகைவென்ற பல்லினய்!
இல்லையோ? மற்று
நமர் சென்ற
நாட்டுளிக் கார்.

பொருள்: முல்லையரும்புகளை வென்ற பல்லழகு மிக்க தலைவியே,தலைவர்பிரிந்துபோயிருக்கும் நாட்டில் இங்கு காணப்படும் மேகத்திரட்சி, மின்னலும் ஆரவாரமும் இடியும் இவைபோன்ற பிறவுமாகிய பிரிந்தாரை வருத்துதற்குரிய ஆயுதங்களைப் பரப்புவதற்கு இல்லாமற் போயிற்று? ('கார் காலத்திற்குரிய அறிகுறிகள் தலைவர் சென்ற நாட்டிலும் தோன்றும்' எனத் தோழி கூறுகின்றார்.)

வருவர் வயங்கிழாய்
வாளொண்க கணீர்கொண்(டு)
உருகி யுடன்றழிய
வேண்டா—தெரிதியேல்
பைங்கொடி முல்லை
அவிழரும் பீன்றன
வம்ப மழையுறக் கேட்டு.

பொருள்: மின்னுகின்ற அணிகலன்களைப் பூண்ட பெண்ணே! ஆராய்ந்து பார்ப்பாயாயின் காலமல்லாத காலத்தில் புதிதாகத் தோன்றி நிலைத்திராத மேகங்கள் கூடி முழங்க அதைக் கேட்டு பசிய கொடிகளையுடைய முல்லைச் செடிகள் மலரும் பருவத்தையுடைய மொட்டுக்களைத் தோற்றுவித்தன. ஆகவே கார்ப்பருவம் மெய்யாகவே வருமாயின் நமது தலைவர் தவருது வந்து சேர்வர், ஆதலின் வாளையொத்த ஒளியினையுடைய கண்களிலிருந்து நீர்பெருக உடம்பு உருக்குலைய வருந்த வேண்டாம்.



# பலியாடு

— துவீபன் —

"டாக்டர்ஐயா, உங்க புண்ணியத்திலே நான் பிறந்த நாட்டுக்கு வந்தேன். இன்னும் கொஞ்ச நாட்களிலே இந்த உலகத்தையே விட்டுப் போயிடுவேனுனு நினைக்கிறேன். இப்பவும் சுகமில்லாமல் இருக்கிறேன். நான் உலகத்தை விட்டு போறதுக்கு முன்னால என்னோட கடைசி ஆசையை நிறை வேத்தி வைச்ச உங்களுக்கு என் நன்றியை தெரியப் படுத்தத்தான் இக் கடிதத்தை எழுதுகிறேன்.—இப்படிக்கு மாரி" டாக்டர் தர்மசேனவுக்கு கடிதத்தை வாசித்துக் காட்டி விட்டு அவர் முகத்தை நோக்கினேன் நான்.

அவர் கண்களிரண்டும் ஈரமாகி இருந்தன.

"டாக்டர் உங்களுக்கு ஆட்சேபனை இல்லையென்றால், யார் இந்த மாரி? அவளது கடைசி ஆசை என்ன? அதை நீங்கள் நிறைவேற்றியது,இதையெல்லாம் நான் அறிந்து கொள்ளலாமா?"

என் கேள்விகளுக்கு டாக்டரிடமிருந்து உடனே பதில் வரவில்லை. அவர் அந்த—இந்தியாவிலிருந்து வந்த வான் கடிதத்தையே பார்த்துக் கொண்டிருந்தார்.

பிறகு கடிதத்தை மடித்து தன் காற்சட்டைப் "பாக்கட்"டில் வைத்து விட்டு என்னைப் பார்த்தார்.

"சொல்கிறேன். உங்களுக்கு மட்டுமல்ல. இந்த நாட்டிலுள்ள ஒவ்வொருவரும் தெரிந்து கொள்ள வேண்டிய கதை மாரியின் கதை"

இந்தப்பீடிகையுடன் டாக்டர் தர்மசேன சொல்லிய அந்தக் கதையை இப்போது நான் உங்களுக்கு சொல்லுகிறேன்:

கண்டி டவுனில் இருந்து இரண்டு மைல் தொலைவில் உள்ள ஒருதேயிலைத்தோட்டத்தில் உள்ள அந்தக் குன்றின் மேல் நின்று கொண்டிருக்கிறாள் கண்ணம்மா. அந்தக் குன்றின் மேல் இருந்து பார்த்தால் கண்டி நகரம் முழுவதும் நன்கு தெரியும்.

ஒரு புறம் ரயில் நிலையம்; மறுபுறம் பஸ் நிலையமும்,புதிய சந்தைக் கட்டிடமும்; இன்னொருபுறம் கடை வீதி; நான்காம் திசையில் கண்டி வாவியும், தலதா மாளிகையும், நாற்புறமும் தெரியும் இக் காட்சிகளிலே தலதா மாளிகையும் அதன் முன்னால் உள்ள வாவியுமே கண்ணம்மாவின் கருத்தை மிகவும் கவர்ந்தது.

மணிக்கணக்காக அந்த மனோரம்மியமான காட்சியை பார்த்தபடியே அமர்ந்திருக்கிறாள் கண்ணம்மா. எத்தனை முறை பார்த்தாலும் அலுக்காதி காட்சி அது அவளுக்கு. கண்ணம்மா, அவள் தாய், அண்ணன் ராமையா மூவர் தான் அவள் குடும்பத்தில். தந்தை எப்போதோ காலமாகி விட்டார். அவர் முகத்தைக்கூட கண்ணம்மா பார்த்ததில்லை.

"கண்ணம்மா!" காற்றில் கலந்து வந்த அக்குரல் அவள் காதுகளில் விழுந்தது. குன்றின் கீழே உள்ள லயத்திலிருந்து அவள் தாய் மாரிதான் கூப்பிடுகிறாள்.

"இந்த அம்மாவுக்கு வேற வேலை இல்லை. எப்பபார்த்தாலும் என்னையே எல்லாத்துக்கும் கூப்பிட்டுக்கிட்டு இருக்கு" கண்ணம்மா தனக்குள் சலித்துக் கொண்டாள்.

"ஏ! அம்மோய்! நானு இங்கேதான் இருக்கேன்" இருந்தபடியே தாய்க்கு குரல் கொடுத்தாள் அவள். அதன் பிறகு கீழிருந்து எந்தவித சத்தமும் வரவில்லை.

கண்ணம்மாவும் பழைய படி,தனக்குப் பிடித்த அந்தக் காட்சியிலே லயித்துப் போனாள்.

திடீர் என ஏதோ கூச்சலும், கூப்பாடுகளும் மெல்லென கேட்டன. கடை வீதி உள்ள திசையிலிருந்துதான் அந்த சத்தமும் வந்து கொண்டிருந்தது. அங்கே கரும்புகை மண்டலம் வானத்தை நோக்கி எழுந்து போய்க் கொண்டிருந்தது.

"ஏன் அந்த சத்தம்? அங்கு எழும் புகைக்கும், தீச்சுவாலைக்கும் காரணம் என்ன? கண்ணம்மாவுக்கு எதுவும் புரியவில்லை. அந்த சத்தமும் டவுனில் இருந்த படியாக நாற்புறமும் பரவிக் கொண்டு வந்தது.

## நோய்க்கு மருந்து

தந்தை செல்வநாயகம் எந்தவொரு பிரச்சனையையும் மிகவும் உன்னிப்பாகவும் — சிரத்தையுடனும் செவிமடுப்பார். பல சமயம் பிரச்சனையை சொன்னவரிடமே "நோயை சொல்லிவிட்டீர்கள், நோய்க்கு மருந்தையும் சொல்லுங்கள்" என்று கேட்பார்.

(இளங்கோ.)

அவள்கரம் அவளையும் அறியாமல் தலதாமாளிகை உள்ள திசையில் குவிந்தது.

அவள் குன்றை விட்டு இறங்கி வீட்டை நோக்கி ஓட ஆரம்பித்தாள்.

அவள் குன்றின் விழிம்பில் வந்ததும் அப்படியே ஸ்தம்பித்து நின்று விட்டாள். கீழே அவளுடைய வீடு—அந்த லயத்தைச் சுற்றி மனிதர்கள் கைகளில் தடிகளுடனும், இரும்பு ஆயுதங்களுடனும் நின்றிருந்தனர்.

"பற தெமளோ ஒக்கம எலியட்ட பெப்பல்லா"

கர்ணகடூரமாக ஒலித்த அக்குரலைத் தொடர்ந்து லயத்தில் இருந்த ஏழைத் தொழிலாளர்கள் பலவந்தமாக வெளியே இழுக்கப்பட்டு தாக்கப்பட்டார்கள்.



ஆண்கள், பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் என்ற பேதம் காட்டவில்லை.

மனிதர்களே மனிதர்களை வேட்டையாடும் அந்தக் காட்சியைக் கண்டு இரத்தம் உறைந்து போன நிலையில் நின்றிருந்தாள் கண்ணம்மா.

அவள் தாய் தலையில் இரத்தம் வடிய ஒரு கரத்தால் தலையைப் பற்றியபடி மறுகையால் கண்ணம்மாவை அங்கு வர வேண்டாம் என கையை காட்டினாள். அவள் அண்ணன் ராமையா-அவனை அங்கு காணவில்லை.

பாதையில் ஒரு ஜீப்வண்டி வரும் சத்தம் கேட்டதுதான் தாமதம், அந்த மனித வேட்டைக்காரர்கள் நாலாபுறமும் சிதறி ஓடினார்கள். சிலர் கண்ணம்மா நின்றிருந்த குன்றை நோக்கியும் ஓடி வந்தார்கள். கண்ணம்மாவும் திரும்பி அதே பழைய இடத்திலே வந்து நின்றாள்.

அவள் இதயம் பட பட என தேயிலை பாக்டரியில் உள்ள இயந்திரம்போல் பெரிய சத்தத்துடன் அடித்துக்கொண்டது. அவள் தன் பார்வையை தொலைவில் ஓட்டினாள்.

கடை வீதிப் பக்கத்தில் இருந்து இன்னமும் புகை மண்டலமும் கூக்குரலும் வந்து கொண்டிருந்தன. மறு பக்கத் தலதா மாளிகையும் அந்த வாவியும் அமைதியாகவே இருந்தன.

"பகவானே! சாந்தத்திற்கு பெயர் பெற்ற உன்னை வணங்கும் இந்த நாட்டில் இப்படியும் ஒரு கொடுமையா? புனித நகரம் என எல்லோரும் சொல்லும் இந்த ஊரிலே இப்படிப் பட்ட அநியாயம்?"

கண்ணம்மா மானசீகமாக மன்றாடினாள்.

திடீர் என அவள் தோள்களை யாரோ தொட்டார்கள்

திரும்பிப் பார்த்தாள்!

இருதயமே ஒரு கணம் நின்று விட்டது போன்ற அதிர்ச்சி!

அவள் முன்னால் நான்கு பேர்—அந்த வேட்டைக்காரர்களில் சிலர் நின்றிருந்தார்கள்.

அவள் ஓட எத்தனித்தாள். ஒருவன் எட்டிப் பிடித்தான் அவளை.

கூக்குரலிட முயன்றாள் வாயில் எதையோ சுருட்டி அடைத்தான் மற்றவன்.

இருவர் அவளைத்தூக்கி கற்பாறையில் — எதில் அமர்ந்திருந்து அவள் தலதா மாளிகையின் அழகை, தெய்வீகத்தை அனுபவிப்பாளோ அதே கற்பாறையின்மீது கிடத்தினர்.

ஆடைகள் அலங்கோலமாக்கப் பட்டன.

துடித்தாள்!

துவண்டாள்!

கால்களால் எட்டி உதைத்தாள்!

# 17 ஆம் நூற்றாண்டு (1623—24) தமிழகம்

"இளம் பெண்கள் பல கூட்டங்களாக வீதியிற் செல்வதை நாம் கண்டோம். அவர்கள், தம் வழக்கத்திற் கேற்ப, நன்றாக உடையணிந்திருந்தார்கள். ஒட்டியாணத்துக்கு கீழே, நன்கு தைக்கப் பட்ட பட்டு அணிந்திருந்தனர். அதற்கு மேல், சிலர் ஒன்றும் அணியவில்லை. சிலர் மிகவும் திறமையான சிலினன் அணிந்திருந்தனர். சிலருடைய சிலினன் ஒரே வர்ணமாக இருந்தது. சிலருடையவை, கோடிடப்பட்டு, வேறும் பல வேலைப்பாடுகளையுடையனவாயிருந்தன. இதே போன்ற கழுத்துப் பட்டைகளைத் தோளில் அணிந்திருந்தனர். அவர்களுடைய தலைகளை அணி செய்த மஞ்சட் பூக்களும் வெள்ளைப் பூக்களும் தலையின் மேல் ஓர் உயர்ந்த கிரீடம் போன்றிருந்தன; சில சூரியனின் ஒளிக் கதிர்களை போல் வெளியே தெரிந்தன. மற்றவை ஒன்றாகச் சேர்ந்து முறுக்குப் பட்டுப் பல மாதிரித் தூங்கின. இது பார்ப்பதற்கு அழகான காட்சியாக இருந்தது. அவர்கள் அனைவரும் தம் ஒவ்வொரு கையிலும், வர்ணம் பூசப்பட்ட உருண்டையான ஒரு தடியைக் கொண்டு சென்றனர். அவற்றின் நீளம் ஒரு சாண் அல்லது சற்று அதிகமாக இருக்கலாம். மேளம் முதலிய இசைக் கருவிகளுக்கேற்ப, காலப்பிரமாணத்தின் படி அவர்கள் அந்தத் தடிகளை ஒன்றாகச் சேர்த்துத் தட்டினார்கள். அவர்களுள் மிகவும் திறமைசாலியான ஒரு பெண் ஒரு பாட்டின் சில அடிகளைப் பாடினாள். அதன் முடிவில், பாட்டின் யாப்பிற்கு ஏற்றபடி ஏழு அல்லது எட்டுத் தடவை, மற்றவர்கள் "கோலி, கோலி, கோலி" என்று பதிலளித்தார்கள். இந்தச் சொல் என்னத்தைக்குறிக்கிறது என்பது எனக்குத் தெரியாது. ஆனால் அது மகிழ்ச்சியைக் குறிக்கும் ஒரு சொல் என்றே நம்புகின்றேன். ஒரு விசேட விழாவிற்காகவே அவர்கள் அப்படிச்சொன்னார்கள் என நம்புகிறேன்"

(பீதுறுதெல்லா வாலி என்ற வரலாற்று ஆசிரியர்.)

---

எல்லாம் வீண் பிரயத்தனமாகவே போனது.

ஒன்று! இரண்டு! மூன்று! என ஒவ்வொருவராக அவள் மீது படை எடுத்தனர்.

நான்காவது மிருகமும் அவளை நோக்கி குனிந்த போது ஒருகரம் அவன் முகத்தை பதம் பார்த்தது.

வெறி பிடித்த மத யானை போல் அவர்கள் முன் நின்றிருந்தான் ராமையா. அவன் கண்கள் செக்கச் செவேல் என நெருப்புத்தணல்போல் பிரகாசித்தன. அவன் உடலெங்கும் நரம்புகள் புடைத்து வெடித்து விடுவது போல் விம்மி நின்றன.

கீழே விட்டிருந்த ஆயுதங்களை மின்னல் என பாய்ந்து எடுத்துக் கொண்டனர் அந்த நால்வரும். நான்கு இரும்புக் குழாய்களும், இரு மனித கரங்களும் மோதிக் கொண்டன.

இரும்பின் முன்னால் சாதாரண கரங்கள் எம்மாத்திரம். தலையிலிருந்து இரத்தம் ஆறாகப் பெருக, உடலெல்லாம் காயங்கள் சேரசேர ராமையா சிறிது சிறிதாக தன் நிலையை இழக்கத் தொடங்கினான்.

"எதி மச்சான் யமு" நால்வரும் சிட்டாகப் பறந்தனர். ஆடையெல்லாம் அகன்ற நிலையில் அலங்கோலமாக அறிவு மயங்கி கிடந்த தங்கையை நோக்கினான் ராமையா.

"விண்விண்" என வேதனை தரும் காயங்களை பொருட்படுத்தாமல் அப் பாறையை நெருங்கினான்; தன் மேல் சட்டையை கழற்றி தங்கையின் உடல் மேல் போர்த்தினான். அப்படியே சுருண்டு மயங்கி விழுந்தான் அவனும்.

வேதனையுடனும் பயத்துடனும் இருந்த லயத்து மக்கள் யாவரும் கண்ணம்மாவினதும், ராமையாவினதும் நிலை கண்டு தம் துயர் மறந்து உதவிக்கு ஓடி வந்தனர். வழியில் வந்த ஒரு இராணுவ வண்டியை மறித்து விசயத்தை விளக்கினார்கள்.

கண்ணம்மாவும், ராமையாவும் வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டார்கள். மாரி வாயிலும், வயிற்றிலும் அடித்துக் கொண்டபடி மகளின் கட்டிலுக்கும், மகனின் கட்டிலுக்கும் மாறி மாறி நடந்து கொண்டிருந்தாள்

சிறிது நேரத்தின் பின் ராமையாவுக்கு நினைவு திரும்பியது. "என்னை விடுங்கள் நான் அந்த மிருகங்களை பழிக்குப் பழி வாங்காமல் விடமாட்டேன்." ராமையா வெறி கொண்டவன் போல் கத்தினான்.

"அப்பா! ஆத்திரப் படுவதில் பயன் என்ன அவர்களை கொல்வதினால் உன் தங்கையின் கற்பு திரும்பிவந்து விடப் போகுதா? தெய்வம் என்று ஒன்று இருக்கிறது. அது எல்லாத்தையும் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறது"-டாக்டர் தர்மசேன அமைதிப் படுத்த முயன்றார். "ஆமாம் டாக்டர்! தெய்வம் எல்லாத்தையும் பார்த்துக் கொண்டுதான் இருக்கு. வெறுமனே பார்த்துக் கொண்டுதான் இருக்கு" என்றான் ராமையா.

"தெய்வம் நின்று கொல்லும் என்று பெரியவங்க சொல்லியிருக்காங்க தம்பி" டாக்டர் கூறினார்.

ராமையா மேலே எதுவும் பேசவில்லை.

மறுநாள் அதிகாலை வேளை டாக்டர், கண்ணம்மாவின் நாடித்துடிப்பை உன்னிப்பாக கவனித்த படி நின்றிருந்தார். அப்போது ஒரு நர்ஸ் ஓடி வந்தாள்.

"டாக்டர்! டாக்டர்! அந்த ராமையாவை வாட்டில் காணவில்லை.

டாக்டரிடமிருந்து ஓர் ஆழ்ந்த பெருமூச்சுவெளிப்பட்டது. அதுஎதற்கு? ராமையா ஓடி விட்டதற்காகவா? இல்லை கண்ணம்மாவின் நிலைக்காகவா? நர்ஸால் அப்போது அதைப்புரிந்து கொள்ள முடியவில்லை.

மாரி கதறினாள். கண்ணீர் விட்டாள். அநியாயத்திற்குப் பலியான மகளின் உடல்மேல் புரண்டு அழுதாள்.

பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடும் என்பது போல் பகற்பொழுதில் வந்த சேதி அவளை மிகவும் தாக்கி விட்டிருக்க வேண்டும். தங்கையை நாசப் படுத்திய நய வஞ்சகர்களை தீர்க்க முயன்ற ராமையா அவர்களில் ஒருவனாலேயே கொல்லப் பட்டான் என்பதே அச்செய்தி.

மாரிக்கு ஏற்பட்ட இழப்பைக் கண்டு மிகவும் பச்சாதாபப்பட்டார் டாக்டர் தர்மசேன.

அன்பே இன்பம் என போதித்த புத்தன் காட்டிய மார்க்கத்தை பின்பற்றும் மனிதர்கள்தானா இப்படி மற்றவர்களை ஆடு, மாடுகளைப் போல் கொன்று குவிக்கிறார்கள்.

டாக்டர் மாரிக்கு தன்னால் ஆனவரை ஆறுதல் வார்த்தைகள் கூறினார்.

"டாக்டர் இது என்ட வாழ்க்கையிலே இரண்டாவது முறை. பதினெட்டு வருசத்திக்கு முன்னாலேயும் நான் இது போன்ற சண்டையிலே இரு பொருட்களை பறி கொடுத்தேன். இப்பவும் இரண்டு பொருட்களை பறி கொடுத்துட்டு நிக்கிறேன். இன்றைக்கு பறி கொடுத்தது என்ட மகனையும், மகளையும். அன்றைக்கு பறி கொடுத்தது, என்ட புருசனையும், கற்பையும்" என்றாள் மாரி.

இந்த நாட்டில் தன் கணவன், கற்பு,மகன், மகள் எல்லாவற்றையுமே பறி கொடுத்து விட்ட அந்த அபலைப் பெண் தான் கடைசி ஆசையாக தான் பிறந்த மண்ணில் போய் உயிரை விட விரும்பினாள்.

டாக்டர் தர்மசேன தான் அவள் இந்தியா போய் சேர்வதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்து கொடுத்திருக்கிறார். அதற்கு நன்றியாகத்தான் இக் கடிதம்.

டாக்டர் கதையை கூறி முடித்ததும் அவரிடம் நான் கேட்டேன்.:

"ஏன் டாக்டர்! உலகில் எந்த மூலையில் இனவெறி, மதவெறி, போர் எது ஏற்பட்டாலும் பெண்களின் கற்பு சூறையாடப் படுவதுதானே எங்கும் பொதுவானதாக நடக்கிறது. இப்படிஎதற்குமேபெண்களின் கற்பை பலியாடாக்குவதற்கு இந்த மனிதர்களின்காமவேட்கையும், அறிவீனமும் தான் காரணமா? இல்லை ஆண்டவனின் படைப்பிலுள்ள குறையா?"

எனது இந்த கேள்விக்கு டாக்டர் பதில் சொல்லவில்லை

# சுதந்திர ஒளி

தாலாட்டும் தாய்ப்பாலும் தமிழோடுதான்
தங்கம் நிகர் தமிழ்மொழியே உயிர்மூச்சாச்சு!
கோலாட்டம் அதுதமிழர் வீரம் சொல்லும்
கொள்கையுரம் தமிழர்தம் நெஞ்சைக்கிள்ளும்
காலாட்டும் போதினிலே சலங்கை கொஞ்சும்
கலைநயங்கள் தமிழின்த்தில் மட்டும் உண்டு
வாலாட்டும் பகைவர்தமை ஓடச்செய்யும்
வாள்வீச்சு வரலாற்றை எடுத்துச்சொல்லும்

வேலெடுத்துத் தமிழ் மண்ணைக்காத்திடுதற்கு
வீட்டுக்கொரு வீரராய் விரைந்துவரணும்
தாளெடுத்ததுத் தமிழ் புகழச் செப்புதற்கு
தமிழறிந்த எல்லோரும் முன்வரவேண்டும்
காலெடுத்துத் தமிழனை சுதந்திரமாக
கவின்நடையைப் பயிலுவதற்கு
வகைசெய்யணு!
தோழிணைந்து தமிழரெல்லாம் ஒருங்கே நின்றால்
தோன்றி விடும் தமிழ்மண்ணில் சுதந்திரஒளி

க. கலாமோகன்.

அழகு குலுங்கும் அதிர்ஷ்டமான இடம், விஸ்வா மித்திரரே ஆசை கொள்ளக்கூடிய அருமையான நிலம்.

மனதை முட்டும் மலை நீட்டங்கள், கண்ணேக்கவரும்கடல் ஓரங்கள், பார்வையை ஈர்க்கும் பசுந்தோட்டங்கள் இவைகளை மேவி, நினைவைத் திருப்பும் நீல வானம் நின்று சிரிக்கும் கரு முகில் கூட்டம்.

அப்பப்பா,,
எத்தனை அழகு,
வர்ணனையே அதற்குத் தொடர்கதை,
இதுதான் அந்தக் கிராமம்.

இளமை எழில் கொஞ்சும் இந்த மண்ணிலே, மனம் விட்டுப்பேச ஒரே ஒரு மருத மரம்தான் நின்றது. திரண்ட அடியும், பரந்த கிளையும், அடர்ந்த இலையும், அதன் எழிலை இரட்டிப்பாக காட்டிக்கொண்டிருந்தன.

அகன்ற வானத்தில் ஒரு ஆதவன் போல், அது அங்கு சுடர் விட்டுப் பிரகாசித்துக் கொண்டு இருந்தது. இந்த நிலையில் அது மாற்ருன் மரங்களையே மண்டியிட வைத்து விட்டது. இதன் செழுமையும் குளிர்மையும் மற்றைய மரங்களை வாட்டி வதைத்தன; பொருமை துளிர் விட்டது; பொருமுதல் நிலை கொண்டது.

இப்போது எல்லா மரங்களுக்குமே அதன் மீது ஒரு கண்தான். அது ஞானக்கண் அல்ல' நிச்சயம் ஊனக்கண் ஆகத்தான் இருக்கும்.

அந்தப் பசுமை நிழல் தவழும் மருத மரத்தில் கிளிகளே தனி இராச்சியம் அமைத்து இராஜாங்கம் நடத்தின. அன்ருெரு நாள்-

பின் ஒருகால், மாற்ருன்மரமான மகிழ மரங்கள் வந்ததுமே சுயநலம் கொண்டு, சுக போகம்நாடி அந்த மரங்களைத்தேடிப் பறந்தன கிளிகள்.

"என்னை அழித்தவனை நான்
விட்டினும்...என்னை
வளர்த்தவனை நான், அழிக்கவோ
பழிக்கவோ...விடமாட்டேன்."

என்ற சுதந்திர தாகம் கொண்ட ஒரு சில கிளிகள், சுகபோகம், வசதி எமக்கு வேண்டாம், பிறந்த இடமும், பெருமையான எம் வாழ்வும் தான் வேண்டும் என்ற அசையாத உரம் கொண்டு அங்கே தங்கள் தாயகத்தைக் காக்கும் பணியில் ஈடுபட்டன.

எள் இட்டால் இறங்க முடியாத அளவு இருந்த கிளிகள், இப்போது கிளை ஒடிந்தாலும் பறக்க முடியாத நிலையில் இருந்தன.

"எப்படி வாழ்ந்த நாங்கள்
இப்படி வாழ நேர்ந்ததே"




என்று கண்ணீர் விட்டுக் கதறியும் அழுதன சில கிளிகள். எங்கள் தாயகத்தில் போதிய இடங்கள் இருந்தும் போகத்தை நாடிப்போன தன் நண்பர்களிடமும் சில கிளிகள்சொல்லி வருந்தாமல் இல்லை,

## இரசிகமணி கனக-செந்திநாதன் நினைவுச் சிறுகதைப்போட்டி

இரசிகமணியின் மீது இலக்கிய அன்பு உள்ள நண்பர்கள் சிலர் சுடரின் ஆதரவுடன் ஒரு சிறு கதைப் போட்டியை நடத்த முன் வந்துள்ளனர்.

* சிறு கதைகள் 6 முழுத்தாளிற்கு மேற்படாமல் சமூகப்பார்வை உள்ளனவாக எழுதப்படல் வேண்டும்.
* முடிவு திகதி ........... 10/1/1979.
* பரிசுகள்: முதற் பரிசு ரூபா 100/-
  இரண்டாம் பரிசு ரூபா 50/-
  மூன்றாம் பரிசு ரூபா 25/-
* கதைப் பிரதியின் உடலுள் எழுத்தாளரின் முகவரியோ பெயரோ குறிப்பிடக் கூடாது, தனியான தாளில் தரப்படவேண்டும்.
* பரிசு பெறும் கதைகளும் போட்டிக்கு வரும் தரமான கதைகளும் தொடர்ந்து சுடரில் பிரசுரிக்கப்படும்.
* ஆக்கங்கள் அனுப்பப்படவேண்டிய முகவரி:

**இரசிகமணி நினைவுச் சிறுகதைப் போட்டி,**
ஆசிரியர் ''சுடர்''
194ஏ, பண்டாரநாயக்க வீதி,
கொழும்பு-12.

---

''என்ன செய்வது நடந்தது நடந்து விட்டது, இனி நடக்க வேண்டியதைக் கவனியுங்கள்'' என்று முதிர்ந்த கிளி ஒன்று சொன்னது.

''தீவிரமாக இயங்குவதென்றால் எப்படி, அதற்கு என்ன வழி'' என்று சில இளங்கிளிகள் நெஞ்சை நிமிர்த்திக்கேட்டன.

''அதைத்தான் சொல்லப் போகிறேன் கவனமாகக் கேளுங்கள், வசதியையும் சுகத்தையும் தேடிப் போனவர்கள், நாங்கள் வருந்தி அழைத்தாலும் வரமாட்டார்கள். அப்படி ஆய்க்கினைக்காக வர நினைத்தாலும் அவர்களது சுகபோகமும், வால்பிடித்துப் பெறும் வரட்டுக் கௌரவமும், அவர்களை இங்கு ஒருபோதும் வர விடாது. ஆனால் இன்று, பழம் பழுக்க வௌவால் வரத்தானே வேண்டும். இதை நீங்கள் மனதுக்குள் வைத்துக் கொண்டு. தொடர்ந்து கவனியுங்கள். அணைக்கின்ற கை தான் அடிக்கும், இப்போது அணைக்கின்ற காலம். பயப்படாதீர்கள் அடிக்கின்ற காலமும் வரத்தான் போகிறது. ''போன மச்சான் திரும்பி வந்தான் கோமணத்தோடு'' என்று வருகிற காலமும் தூரத்தில் இல்லை. என்றாலும் இப்பொழுது இங்கிருக்கும் நாங்கள் எல்லோரும் ஒன்று திரண்டு, எங்கள் இடத்தைக் காக்க, ஒரே மனத்தோடு இன்று தொட்டு குடும்பக்கட்டுப் பாட்டைத் தளர்த்தி எங்கள் வழித்தோன்றல்களை மிகைப்படுத்துமாறு உங்களிடம் அன்புடனும் பணிவுடனும் கேட்டுக் கொள்ளுகின்றேன். இதை எனக்காக நான் கேட்கவில்லை. என்னைப் பெற்று வளர்த்த தாயகத்தை காப்பதற்காகக் கேட்கின்றேன். தொடரட்டும் உங்கள் பணி. தோன்றட்டும் உங்கள் கனி.'' என்று தன் ஆசியைக் கூறி தன் நீண்ட உரையை முடித்துக்கொண்டது அந்த முதிர்ந்தகிளி.

கிளிகள் அனைத்தும் துள்ளிப்பறந்தன. எங்கும் கீச்சல் ஒலி, இது மகிழ்ச்சியா, இல்லை வீழ்ச்சியா, இரண்டும் தான். அப்படி இருந்தது அவைகளின் செய்கைகள். நாட்கள் நடந்தன; வாரங்கள் வளர்ந்தன; மாதங்கள் மாறின; வருடங்கள் வாடின.

தொடர்ந்த பணியால் தோன்றியது கனி. கிளி இனம் சற்று புத்துயிர் பெற்றது. அதனால் பூரிப்பும் கொண்டன. என்றாலும் போதாது என்றும் சில கிளிகள் கூறின. பூரண திருப்தி இல்லாவிடினும் திருப்தி என்ற அளவில் கிளிகள் வாழ்ந்தன. இவைகளில் அதிகம் கழுத்தில் ஆரம் உள்ள கிளிகள். ஒரு சில ஆரமற்ற கிளிகள் இவற்றுடன் அதே மருதமரத்தில் வாழ்ந்தன. சற்று ஒதுங்கி புறம்பாக.

சில நாட்களின் பின் நாலைந்து ஆரமற்ற கிளிகள் அந்த மருத மரத்துக்கு வந்து சேர்ந்தன. நாலும் ஐந்துமாக சில ஆரமற்ற கிளிகள் வந்து சேர்ந்து கொண்டன.

நீறுபூத்த நெருப்பாக இருந்த, உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற ஆரமுள்ள ஆரமில்லாத கிளிகளின் பூசல் விரிசல் அடைந்தது.

இலை மறையாக இருந்து வந்த பூசல் எரிமலையாக வெடித்தது. சாதிச்சண்டை விகாரமாக வளர்ந்து கொண்டு வந்தது.

ஆரமுள்ள கிளிகள் பல கூடி கீச் கீச் என்று கதைப்பதும், ஆரமில்லாத கிளிகள் பல ஒன்று கூடி வேறு ஒரு பக்கத்தில் கீச் கீச் என்று கதைப்பதும் கிளிகளினது நாளாந்தப் பிரச்

சீனயாக மாறிவிட்டன. என்றாலும் சில ஆரமுள்ள கிளிகளும் ஆரமில்லாத கிளிகளும் ஒதுங்கி இருந்து கொண்டு தங்களுடைய இனத்தின் சாதிச் சண்டையை கவனமாக கேட்டுக் கொண்டும் பார்த்துக் கொண்டும் இருக்கத் தவறவில்லை.

கிளிகளினது சாதிப்பூசல் விகாரமடைந்தது. கோஷ்டிச் சண்டைகளும் ஆரம்பமாகிற்று. ஒன்றினுடைய கூட்டை மற்றொன்று பிய்ப்பதும், உணவுதேடும்போது சந்தித்துக் கொண்டால் ஒன்றை ஒன்று கொத்தி சண்டை இடுவதும் பழக்கமாகி வழக்கமாக வந்து விட்டன.

இந்த இனச்சண்டையால் கிளிகள் இரண்டு பகுதிகளாகப் பிரிந்து ஒவ்வொரு பக்கத்தில் பிரிந்து ஒதுங்கி வாழத் தொடங்கின.

கிளிகளுக்கிடையில்நடந்து வரும் சாதிச் சண்டைகளை சாதகமாக பயன்படுத்திக் கொண்டு ஞானக்கண் போன்ற ஊனக்கண் கொண்ட காக்கைகள் ஒரு சில வந்து தங்கள் கூடுகளை மருத மரத்தில் கட்டிக் கொண்டு வாழத் தொடங்கின.

கிளிகளது உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற சாதிச் சண்டை, மாற்றான் இனமான காக்கை வந்து கூட்டைக் கட்டி தங்கள் தாயகத்தை அபகரிப்பதைக்கூட தெரியாத அளவுக்கு வளர்ந்து விட்டது.

கனவு கண்ட காக்கைகள் நனவாக நிமிர்ந்து நடந்தன. அத்துடன் அவை நிற்கவில்லை. தங்கள் இனத்தைப் பெருக்கவும் தொடங்கி விட்டன. அதுமட்டுமல்ல, தங்கள் இனத்தை வேறு இடங்களில் இருந்துதாங்கள் இருக்கும் இடத்துக்கு வருமாறு வருந்தி இரகசியமாக அழைக்கவும் தலைப்பட்டன.

ஆரம்பத்தில் அன்புக் கட்டளையாக இருந்தது மாறிமாறி அதிகார ஆணையாக வெளிப்பட்டது. இப்படி திட்டமிட்ட குடியேற்றம் அங்கு இரகசியமாக நடந்தது.

சில காக்கைகள் இந்த அதிகார துஷ்பிரயோகத்தை மறைமுகமாக எதிர்த்தன. ஆனால் நேராக எதிர்க்க அவைகளும் முன்வரவில்லை.

## அன்னியருக்கு ஓர் அட்டை!

ரோம் நகரில் அயல் நாட்டவர் யாராவது தங்கள் காரை நிறுத்தக் கூடாத இடத்தில் நிறுத்தி விட்டால் அந்நாட்டுப் பொலிஸ் காரர் அவரிடம் ஒரு நீல நிற அட்டையை கொடுப்பார்.

அதில், "அன்புள்ள ஐயா, உலக யாத்திரீகர்களால் மிகவும் புகழப்படும் ரோம் நகருக்கு உங்கள் வரவு நல்வரவாகுக. எவ்வளவு கவனமுள்ள காரோட்டியாக இருந்தாலும் சமயங்களில் தங்களையும் அறியாமல் இம்மாதிரிக் குற்றங்களை செய்து விடுகின்றனர். இப்போது நீங்கள் போக்கு வரத்துச்சட்டத்தின் பிரிவை மீறி விட்டீர்கள். இத்தவறு உங்களால் வேண்டுமென்றே செய்யப் படவில்லை என்று எங்களுக்குத் தெரியும். ரோமில் தாங்கள் தங்கியிருக்கும் நாட்கள் இன்பமாகக் கழிய வாழ்த்துகிறோம். இப்படிக்கு நகர மேயர்" என்று எழுதப் பட்டிருக்குமாம்.

தினமணிக் கதிரிலிருந்து
தொகுத்தவர்:
வி. விஜயகுமார்,
தென்புலோலியூர்.

இத்திட்டமிட்ட குடியேற்றத்தை ஒருசில காக்கைகள் வெறுத்தன. பேச்சளவில், செயலளவில்அல்ல.சில அறவே அதை ஒதுக்கித் தள்ளிவிட்டன. தங்களுடைய திட்டம் தவிடுபொடியாவதற்கு தடயங்கள் வளர்வதைக் கண்டு நெஞ்சிலே நெருப்பு விட்டன சில பெருச்சாளிக் காக்கைகள். எதிர்ப்புக்கள் கிளம்பும் முன்னே தங்கள் திட்டத்தை மீளாய்வு செய்து சில தந்திரங்களை அதில் சேர்த்துக் கொண்டன.

தங்குவதற்கு இடமும், தாராளமான வசதியும், துணைக்கு நாம் பலமும் செய்து தருகின்றோம்,வாருங்கள்,வந்து குடியேறுங்கள் இப்படி ஒரு தந்திரத்தைக் கையாண்டன சில இனத்துவேசக் காக்கைகள். இவற்றிற்கு சில காக்கைகள் வலுவும் ஊட்டின. இச்சந்தர்ப்பத்தை கேட்ட ஏழைக் காக்கைகள் அங்கே படை எடுக்கத் தொடங்கின.

பொழுது விடிந்தால் வழக்கமாக கேட்கும் கீச் கீச் ஒலி கேட்காது,மாறாக கா, கா, என்ற சத்தம்தான் உயர்ந்து கேட்கிறது.

இந்த நேரத்தில் முதலாளி தொழிலாளி என்று சாதிப் பூசலை சற்று மிகைப்படுத்தி வேறு ஒரு தோரணையில் ஓரிரு வயதான கிளிகள் கோஷம் எழுப்பின. சமத்துவம் என்ற ஒரு சாரத்தை போற்றிக் கொண்டும் சில கிழக் காகங்களைக் கூட்டிக் கொண்டும் சோஸலிச வாதிகள் என்று மூலை மூடுக்குகளில் கூட்டம் போட்ட கிளிகள் கூட இப்பொழுது சுயநலத்துக்கும் புகழுக்குமாக சண்டையிட்டுக் கொண்டு இரண்டு கட்சிகளாகப் பிரிந்து வாழத்தொடங்கின.

இவற்றுள் ஒரு கட்சிக் கிளிகள், நாங்கள் ''ர'' கட்சி என்று கூறின. மற்றக் கட்சிக் கிளிகள் நாங்கள் ''சி'' கட்சி என்று கூறின.

சுயநலமும் புகழும்விரும்பி தங்களுக்குள்ளே பிரிந்து கொண்ட இந்தக் கிழக் கிளிகள் ஒருசில திக்கற்ற இளங்கிளிகளையும், இளங்காக்கைகளையும் பொறுக்கி எடுத்துக்கொண்டு

விழுந்துவிட்ட ஆல் மரம்போல்வளர்ந்து விட்டோம், இனி எங்களை யாராலும் எதுவும் செய்யமுடியாது என்று கூவிக்கு மார்படிகும் ஒருசில



கிளிகளையும் காக்கைகளையும் வைத்துக் கொண்டு விளம்பர பிரசாரத்தில் இறங்கிக் கொண்டன.

உயரக் கொப்புகளில் இருந்து கொண்டு உற்சாகமாக தாழ்வுக் கொப்பில் உள்ள கிளிகளையும், காக்கைகளையும் ‘பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டி விடுவது போல்’ தூண்டிவிட்டு தூர இருந்துபார்க்கும் அக்கிளிகள், சண்டை ஓயும் போது கூட இந்த கிழக் கிளிகளும் காகங்களும் மேலே இருந்து கொண்டு, தாங்கள் கீழே இறங்கி வராது ஈழ்கிளைப் பறவைகளுக்கு தூது விடுவார்கள். தூதுதான் அவர்கள் தொழில். ‘வாருங்கள். வந்து எங்களைக் காப்பாற்றுங்கள் என்று சாபக்குரல் கொடுக்கும் பறவைகளுக்கு, ‘வென்று விட்டீர்கள், விடாதீர்கள்’ என்று தூர இருந்து தூபமிட்டுக் கொண்டிருந்தன.

இது அவர்களுக்குப் பொழுது போக்கு. இங்கு இப்பொழுது கிளிகளுக்குள் கிளிகளுக்கும், காக்கைகளுக்குள் காக்கைகளுக்கும் இருந்து வந்த சண்டை, காக்கைகளுக்கும் கிளிகளுக்கும் உள்ள சண்டைகளாக விஸ்வரூபம் எடுத்தது.

இவற்றையெல்லாம் கவனித்துக் கொண்டு முன் கூட்டியே கிளிகளுக்குத் தேவைப் படும்போது தவறாது தன்புத்தி மதிகளை அடிக்கடி சொல்லி வரும் அந்த வயது முதிர்ந்த கிளி தன் இனத்திற்குள் பிளவுகள் பலபட்டு, பிரிவுகள் தோன்றுவதைக் கண்டு கண்ணீர் வடித்தது, கதறியும் அழுதது. இந்த வயது முதிர்ந்தகிளி ஏன் இந்த தள்ளாத வயதில் அழுகின்றது என்று நினைத்துக் கொண்டு சில கிளிகள் அனுதாபக் குரலுடனும், ஆவலுடனும் கேட்டன.

“நாங்கள் எங்களுக்குள்ளே சண்டைகளை ஏற்படுத்திக் கொண்டு நான் முந்தி நீமுந்தி என்று அழிந்துகொண்டு இருக்கின்றோம். எங்களுக்குத் தெரியாமலே எங்கள் எல்லோரையும் அழிக்க நடக்கும் திட்டமிட்ட குடியேற்றமும், தில்லு முல்லுச் சட்டங்களும் வளர்ந்து வருகின்ற வேகத்

# கடைத் தெரு

''கடற்கரையிற் அண்மையில் உள்ள கடைத்தெருவைப் பார்ப்பதற்கு நாம் சென்றோம்; வீடுகள்—குடிசைகள் என்று சொல்வது பொருந்தும். மண்ணினாற் கட்டப்பட்டு, ஓலையினால் வேயப்பட்டுள்ளன. மிகவும் தாழ்ந்த குடிசைகள் அவை. வீதிகள் மிகவும் ஒடுக்கமாகவும், அதே நேரத்திற் போதிய அளவு நீளமானதாகவும் இருக்கின்றன. மக்கள் தம் வாழ்க்கை முறைக்கேற்ப வாழ்வதற்கு தேவையான உணவுவகைகளும் மற்றைய எல்லா வகையான பொருட்களும் சந்தையில் நிறைந்திருந்தன. உடையைப் பொறுத்த வரையில் அவர்களின் தேவை மிகவும் சொற்பமாகவே இருந்தது. ஆண்களும், பெண்களும், தமது வெட்கத்தை மறைப்பதற்காக, அரையில் இருந்து முழங்கால் வரை பருத்தி அல்லது பட்டினாலான ஒரு சிறு துண்டை அணிந்தனர். உடம்பின் மிகுதிப்பாகத்தை அவர்கள் உடையினாற் சிறிதும் மறைக்கவில்லை. சற்று மேம்பட்டவர்கள், நீல நிறத்துண்டையோ, ஆகாய நீலக்கோடிட்ட வெள்ளை நிறத்துண்டையோ அணிந்தார்கள். அல்லாவிடில் ஆகாய நீலத்துடன் வேறோர் வர்ணத்தையும் சேர்த்து அணிந்தனர். கடும் நீலத்திற்கு அவர்களிடையே பெரும் மதிப்பு இருந்தது. மேலும், ஆண்களும் பெண்களும் மயிரை நீளமாக வளர்த்துக் கொண்டையாகக் கட்டினார்கள்' பெண்களின் கொண்டை ஒரு பக்கத்தில், காதின் கீழே தூங்கியது. அது அவர்கட்கு நல்ல அழகைக் கொடுத்தது.

மற்றைய இந்தியப் பெண்களும் இவ்வாறே செய்தார்கள். மற்றைய தேசத்துப் பெண்களிலும் பார்க்க, இந்தியப் பெண்கள் தலையை அழகு படுத்துவது மிக மிகக் கவர்ச்சி வாய்ந்ததும் அழகானதுமாகும் என்பது என் அபிப்பிராயம்.

ஆண்கள் உச்சிக் குடும்பி வைத்தார்கள். சில சமயம் இது ஒரு பக்கம் சாய்ந்திருக்கும். ஆண்களுட் சிலர், வர்ணம் தீட்டப்பட்ட தலைப்பட்டையை உபயோகித்தார்கள். ஆனால் பெண்கள் எதையுமே உபயோகிக்கவில்லை. இருபாலாரும் கைகளில் காப்பு அணிந்திருந்தனர். பாலக்காட்டு ஆண்களைப் பற்றி நான் கூறியதைப்போல், ஆண்கள் பெரும்பாலும் வாள்களும் கேடயங்களும் அல்லது வேறுவித போர்க்கருவிகளும் கொண்டு செல்வார்கள்''.

(பீதுறு தெல்லா வாலி—கள்ளிக்கோட்டையை பார்த்து விட்டு 1623-24ல் எழுதியது)

---

தைப் பார்த்தால் கூடிய விரைவில் எங்கள் தாயகத்தை பறி கொடுத்து விடுவோமோ என்று தோன்றுகின்றது. ஆகவே என தருமை உடன் பிறப்புக்களே சற்று சிந்தித்துப் பாருங்கள்.''

என்றாலும் அவர்களுக்கு இது ஒரு விளையாட்டு. இந்த வயது முதிர்ந்த கிளியின் வளமான வார்த்தைகள் இளகிய இரும்பான பல கிளிகளை பழுக்கக் காய்ச்சி அடித்தாலும் வளைந்தும் நெளிந்தும் கொடுக்கும், எஃகுப் பாளங்களாக மாற்றின.

இப்பொழுது உணர்ச்சித் துடிப்புள்ள சில கிளிகள் அந்த வயது முதிர்ந்த கிளியின் தலைமையின் கீழ் ஒன்று திரண்டு ஒரு கட்சியாக இயங்கத் திட்டமிட்டன. இதை உணர்ந்த அந்த வயது முதிர்ந்த கிளி ஒரு கட்சியை உருவாக்கியது. என்றாலும் பூசல்கள் குறைந்ததேயொழிய மறைந்துவிடவில்லை. நாட்கள் நடந்தன தனது கொள்கைகளை வலுப்படுத்தும் அரண்களாக இளங் கிளிகள் வளர்மதிபோல் வளர்வதைக் கண்டு மாற்றுக்கட்சிகளில் உள்ள கிளிகளுக்கும் அழைப்பை அன்பு வேண்டுகோளாக விடுத்தது.

வீரமும் விவேகமும் கொண்ட கொள்கைவாதிகளான சில கிளிகளும் இந்த முதிர்ந்த கிளியின் கட்சியில் வந்து சேர்ந்து கொண்டன.

இப்பொழுது கிளிகள் ஆரமுள்ள ஆரமில்லாத என்ற வேறுபாடுகளை ஓரளவு மறந்து அந்த முதிர்ந்த கிளியின் தலைமையின் கீழ் ''கூட்டணி'' என்ற அமைப்பை உருவாக்கின,

மாற்றான் தோட்டத்து மல்லிகையும் மணக்கும் என்ற அண்ணா வார்த்தையை ஏற்றுக் கொண்ட கிளிகள் நறுமணம் வீசும் நாலாவகை மலர்களையும் கொண்டு அழகுக் கலம் பகம் என்னும் தங்கள் கூட்டணியை அலங்கரிந்தன.

கூட்டணியில் சேராத சில கட்சிகள் கூட்டணியின் வளர்ச்சி கண்டு வாயடைத்து சொல் இழந்து நின்றன.

வெறுப்பு தலை தூக்கியது. பொறுமை இழந்த கிளிகள் தங்கள் சாக்கடைச் சாங்கின் வாய்களை அவிழ்த்து விட்டு நறுமணக் கூட்டணி நாற்றமடிக்கின்றது என்ற வதந்தியை கிளிகளுக்கிடையே பரப்பின.

இதைக் கேட்ட 'உயிர் இனத்துக்கு, உடல் மண்ணுக்கு' என்று வாழும் சில கிளிகள், சோளியன் குடும்பி சும்மா ஆடாது. உங்கள் வரட்டு வேதாந்தமும் இனி இங்கு வேகாது என்று வீறு கொண்டு வேங்கைகனாக கர்ச்சித்தன.

என்றாலும் இன்னும் அந்தச் சாதிப் பூசல் முற்றாக

நின்று விடவில்லை. ஆமைவேகத்தில் அவைகளும் இயங்கிக் கொண்டுதான் இருந்தன.

அன்று இரவு தூங்கிமுடிந்த வேளை கீச் கீச் என்ற ஒலியைத் தாண்டி கா கா சத்தம் உயர்ந்து கேட்டுக் கொண்டு இருந்தது. இடைக்கிடை கூ கூ சத்தமும் கேட்டது.

## "முதல் தர்மம்"

ஒரு தடவை புத்தபகவானுடைய சிஷ்யன் ஒருவன், எவனையோ ஒருவனை அழைத்துக் கொண்டு வந்து அவனுக்குத் தர்மோபதேசம் பண்ணும்படி வேண்டினான், அவனிடம் புத்தர் முதலில் தாங்கள் சாப்பிட்டீர்களோ என்று வினவினார்; நான் நேற்று முதல் பட்டினி என்று பதில் சொன்னான். உடனே அவனுக்கு உணவு அளிக்குமாறு புத்தர் தம் சிஷ்யனிடம் சொன்னார். அதற்குச் சிஷ்யன் தர்மோபதேசம் பெறுவதற்காகவே அவன் வந்திருக்கிறான் என்று ஞாபகமூட்டினான்; புத்தர் பசியோடிருப்பவனுக்கு உணவு அளிப்பதுதான் "முதல் தர்மம்," என்று கூறினார்.

அனுப்பியவர்:
ச. ஐயாத்துரை.

'என்ன அதிசயம், இது என்ன குரல் காக்காவுடன் சேர்ந்து இப்பொழுது கூகூவும் சேர்ந்து கொண்டதே. இது எங்கே இருந்து வருகிறது? யாரிடம் இருந்து வருகிறது? என்று அந்தக் கூட்டணிக்கிளிகளின் தலைமைக்கிளி உன்னிப்பாக பார்த்துக் கொண்டும் கேட்டுக் கொண்டும் இருந்தது.

கிளிகள் வாழ்ந்து வந்த அந்த மருத மரத்தில் ஏற்கனவே வந்து கூடுகள் கட்டி வாழ்ந்த காக்கைகளின் கூடுகள் சிலவற்றில் இருந்துதான் அந்த கூ கூ இசையும் வந்தது.

திடீர் என்று அங்கு வந்த காக்கைகளும் இந்தக் கூக்கூவைக் கேட்டுவிட்டு திகைத்தன. என்ன குரல், எப்படி வந்தது, இதைப்பற்றியே அந்தக் காக்கைகளும் சிந்தித்தன.

தங்கள் கூட்டுக்குள் இருந்துதான் கூ கூ வருவதைக் கேட்ட காகங்கள், தங்கள் நோட்டத்தை கூட்டுக்குள் செலுத்தின. அப்பொழுதுதான் காகங்களுக்கு தங்கள் கூட்டில் தங்களையொத்த சிறு வித்தியாசமுடைய குயிலும் இருப்பதைக் கண்டன.

உடனே ஆத்திரம் கொண்ட காக்கைகள் தங்கள் நீண்ட அலகுகளால் குயில் குஞ்சுகளை கொடூரமாக கொத்திக் கலைத்தன. இறக்கைகள் முளைத்த குயில்கள் கூவிக் கொண்டு பறந்தன. மயிர் முளைத்தும் முளைக்காத சில குயில் குஞ்சுகள் இந்த மலமுண்ணிக் காக்கைகளின் கொடுமைகளைத் தாங்காது அபயக் குரல் எழுப்பின. இவற்றைக் கேட்ட அந்தக் கூட்டணியின் தலைமைக் கிளி தன் அணிக் கிளிகளைப் பார்த்து "பாவம்" ஆபத்து என்றால் யாராய் இருந்தாலும் உதவி செய்யத்தான் வேண்டும். பாவம் சிறுபான்மை இனம் என்பதால் இப்படி பெரும்பான்மை இனம் கொத்தி கொடுமைப்படுத்த வேண்டும் என்று சட்டமா? இன்றைக்கு அவைகளுக்கு, நாளைக்கு அது எமக்கு. வீறு கொண்டு எழுந்து காக்கைகளை விரட்டுங்கள், பாவம் அந்த குயில் குஞ்சுகளை காக்க வேண்டும் என்று அந்த முதிர்ந்த கிளி சொன்னதுதான் தாமதம், எல்லாக் கூட்டணிக்கிளிகளும் பறந்தன. திடீர் என்று கிளிகள் பறப்பதைக் கண்டு காகங்களும் ஏதோ ஆபத்து என்று எண்ணி தாங்களும் மரத்தை விட்டு தூரப்பறந்தன. அப்பொழுது பார்த்து கூட்டணிக் கிளியில் சில கிளிகள் நொடிப் பொழுதில், தாங்கள் எதிர்பார்த்தபடி காகங்களின் கூட்டை அடைந்து குயில் குஞ்சுகளைத் தூக்கிக் கொண்டு தங்களுடைய பொந்துகளுக்குள் கொண்டு மறைத்தன.

கலைந்த காகங்கள் திரும்பி வந்த போது கூட்டில் குயில் குஞ்சுகள் இல்லாதது கண்டு மகிழ்ந்து தங்களுக்குள் பயந்து குயில் குஞ்சுகள் பறந்து விட்டன என்று கரைந்து மகிழ்ந்தன.

தலைமைக்கிளி மிக வாட்டமாக இருந்தது. கூட்டணிக் கிளிகள் தலைமைக்கிளியிடம் சென்றன. 'தோழர்களே இப்பொழுது எங்களுக்கு ஓர் இக்கட்டான நிலை வந்துவிட்டது. எங்களுடன் இருக்கும் சாகங்கள் இடத்தைப்பிடித்து விட்டு எங்களை இந்த இடத்திலே அழிக்கத் திட்டமிட்டு வருகின்றன. எனக்கோ முதுமை வளர்ந்து விட்டது. முன்னைப் போல் என்னால் தீவிரமாக இயங்க முடியாது. இந்த நிலையில் எனக்கு ஒரு வாரிசு கட்டாயம் தேவைப்படுகிறது. எனக்காக அல்ல, உங்களை நன்றாக நடத்திச் செல்ல என்று கூறி நிறுத்தும் போது—

நீண்ட நாட்களாக எமது இனத்துக்கு என்றால் எதுவும் செய்வேன் என்ற இளமையும் துடிப்பும் கொண்ட மாணவனான ஒரு கிளியைப்பற்றித் தான் அது நினைத்துக் கொண்டது.

அப்போது பார்த்து அந்தக் கிளி அங்கு வந்து சேர்ந்தது. கூட்டணித்தலைமைக்கிளிக்கோ மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. தலைமைக் கூட்டணிக்கிளி அந்தக் கிளியை அழைத்து கூட்டணிக் கிளிகளுக்கு அறிமுகப்படுத்தியது. "இவன்தான் என் வாரிசு. இளமையும் வீரியமும் கொண்ட இவன்தான் இனி உங்களை வழி நடத்திச் செல்ல தகுதி பெற்றவன். ஆனால் ஒன்று, என்னுடைய காலத்தில் நீங்கள் இந்த மருத மரத்தில் தனி இராச்சியம் அமைக்கா விட்டாலும், என் வாரிசின் காலத்தில் நிச்சயம் இவன் தலைமையில் இராஜாங்கம் நடந்துதான் தீரும். இதை மறந்து விடாதீர்கள்."

அப்பொழுது பார்த்து இன்னொரு கட்சியில் உள்ள பிரசித்தி பெற்ற கிளியும், கூட்டணிக் கிளிகளுடன் வந்து சேர்ந்து கொண்டது. 'கடமை கண்ணியம், கட்டுப்பாடு, என்று எந்தத் தெய்வம், பேரறிஞர் அண்ணா சொன்னாரோ அவரை மனதில் நினைத்துக் கொள்ளுங்கள். வீரம்தானாக வரும்.' என்று கூறி ஆனந்த மேலீட்டால் மேலே பறந்தது. எதிர்பாராத வண்ணம் ஒரு கிளையிலே அது மோதி இறக்கைகளை அடித்துக் கொண்டு கீழே விழுந்தது. எங்கும் நிசப்தம். பூரண அமைதி. நடு நிசியின் தோற்றம். கூட்டணிக் கிளிகள் பதறித் துடித்தன. என்ன செய்வது ஒருமாத காலம் கூட அந்தத் தலைமைக் கிளியின் உயிரைக் காப்பாற்ற முடியவில்லை. கிளி இனத்துக்கே ஒரு கை முறிந்த மாதிரி இருந்தது, அந்த இழப்பு.

என்றாலும் "எனது இறுதி மூச்சு எங்கள் தாயகம் மீண்டும் எங்களுக்கு வரவேண்டும் என்பதே. தளராது கட்டுப்பாட்டுடன் இயங்குங்கள். ''ஆண்ட பரம்பரை மீண்டும் ஒரு முறை ஆளநினைப்பதில் என்ன குறை'' என்று எங்கள் ஆஸ்தான கிளி சொன்ன வாய் மொழி வலுப் பெறட்டும். வாழ்க தாயகம். வளர்க நம் ஒற்றுமை" என்று கூறிக்கொண்டே தன் இறுதிப் பேச்சை மூச்சாக விட்டு கிளியினத்தை ஆற்றொணாத்துயரில் துடிக்க விட்டுவிட்டு பிரிந்து கொண்டது.

தலைவனின் பிரிவு கிளிகளை வாட்டி வதைத்தன. "வெண்ணெய் திரண்டு வரும்போது தாளி உடைந்தது'' போல் ஆகிவிட்டதுஎங்கள் நிலை. எங்கள் வீரத்திற்கும் விவேகத்திற்கும் உயிர் ஊட்டிய அறிவாயுதம் மறைந்து விட்டது. என்றாலும் அதன் வார்த்தைகள் மறைந்து விடவில்லை. எங்கள் தாயகத்தை நீங்கள் தந்த வாக்குறுதியை நிறைவேற்ற எனது உடலில் ஓடும் கடைசித் துளி இரத்தம் இருக்கும் வரைக்கும் எனது உடல், பொருள், ஆவி, எல்லாம் எங்கள் தாயகத்துக்குத்தான். என்னைத் தொடர்ந்து வாருங்கள்.'' என்று அமைதியும் அதிகாரமும் கொண்ட அந்த வாரிசுத் தளபதிக் கிளி கூறியது.

இந்த நிகழ்ச்சி நடைபெறும்போதும் கூட சில கிளிகள் தங்களுக்குள் சாதிச் சண்டை பிடித்துக் கொண்டு இருந்தன. எதிர்பாராத விதமாக அதிகம் தாக்கப்பட்ட ஒரு ஆரமில்லாத கிளி மரத்தில் இருந்து கீழே விழுந்தது. உடனே உணவுக்காக அலைந்து கொண்டு வந்த ஒரு கடுவன் பூனை அதைக் கௌவிக் கொண்டு ஓடியது.

அப்பொழுது அங்கே இரத்தக் காயங்களுடன் வந்து கொண்டு இருந்த சில ஆரமும் ஆரமுமில்லாத கிளிகள், "நீங்கள் இங்கே இருந்து கொண்டு குத்துப்படுங்கள். ஆனால் அங்கே எங்களை காக்கைகள் உணவு தேடும் இடத்திலே உணவு எடுக்கவிடாமல் கொன்றுகுவிக்கின்றன. சில இறந்தும் விட்டன. சில பறந்தும் விட்டன. எனினும் எங்கள் சுதந்திரம் பறிபோவதை நாங்கள் விரும்பவில்லை. நாங்கள் பறந்து திரிவது உணவுக்காகத்தான். அதற்கே இப்பொழுது ஆபத்து என்றால் இனி நாங்கள் இருந்தென்ன, இல்லாமல் விட்டென்ன'' என்று இரத்தம் தோய்ந்த உடலுடன் கர்ச்சித்தன.

தளபதிக் கிளிக்கோ நரம்புகள் துடித்தன. எலும்புகள் புடைத்தன. இரத்தம் கொந்தளித்தது. நாணில் இருந்து புறப்பட்ட அம்புகள் போல் எல்லாக்கிளிகளும் ஒன்றாக ஆத்திரம் கொண்டு மேலே பறந்தன. அப்பொழுது தளபதிக் கிளி எல்லாரும் போய்விட்டால் இங்கே யார் இருப்பது? அவசரபுத்தியால் ஆபத்தை தேடிக் கொள்ளாதீர்கள் என்று சொன்னது.

அங்கே நாங்கள் சாக, இங்கே நீங்கள் உறங்குவதா, என்று அடிபட்ட கிளிகள் சில ஆர்ப்பரித்தன. தாயகத்தைக் காப்பாற்ற ஒரு பகுதி இங்கே இருக்கட்டும். நாங்கள் அங்கே போவோம். வாருங்கள் என்று மற்றக்கிளிகளை கூட அழைத்துக் கொண்டு பறந்தது தளபதிக்கிளி.

கிளிக்கூட்டம் வருவதைக் கண்ட காகங்கள் நாலா பக்கமும் பறந்து ஒளித்துக் கொண்டன. என்றாலும் தாங்கள் எதிர்பார்த்ததுபோல மருத மரத்துக்கு பறந்த ஒரு பகுதி காக்கைகள் அங்கு கிளிகள் இல்லாதிருப்பதைக்கண்டுகுதூகலித்து ஆர்ப்பாட்டம் செய்தன. உடனே பொந்துகளில் பதுங்கி இருந்த கிளிகள் திடீர் என்று பாய்ந்து காகங்களைத் தாக்கத் தொடங்கின. காகங்களை விரட்டச் சென்ற கிளிகள் ஏமாற்றத்துடன் திரும்பிய போது இங்கே கோரமான சண்டை நடந்து கொண்டிருந்தது. உடனே அவைகளும் பாய்ந்து காக்கைக் கூட்டத்தை கொத்திக் குதறின.

ஆட்சி வேண்டாம், ஆளை விட்டால் போதும் என்று சொல்லிக் கொண்டே கொத்துப்பட்ட இரத்தக் காயங்களுடன் பறந்தன காக்கைகள். சில கிளிகள் விடவில்லை. சிறிது தூரம் கலைத்துக் கொண்டு சென்று விட்டும் வந்தன. இப்பொழுது தளபதிக்கிளியின் தலைமையில் மருதமரத்தில் தனி அரசாங்கம் நடந்து கொண்டு இருந்தது. அப்பொழுது மகிழ மரங்கள் வெட்டப்பட்டு காக்கைகளால் கொத்தப்பட்டு சொத்து சுகம் எல்லாவற்றையும் இழந்து உயிர் மட்டும் தப்பினால் போதும் என்ற எண்ணத்துடன் தஞ்சம் என்று வந்து சேர்ந்தன, சில கிளிகள். அன்று எங்களை விட்டுவிட்டு கௌரவம், சுகபோகம் என்று சொல்லிக் கொண்டு பறந்த கிளிகள்தான் அவைகள். அவை தொடர்ந்து 'நாங்கள் அங்கே பேருக்குத்தான் ராசா, ஊருக்கு கூசா. இதுதான் எங்களுக்கு அங்கே நடந்தது. இதுவும் வேண்டும் இன்னமும் வேண்டும் என்று சொல்லி அலுத்துக் கொண்டன.

மருத மரம் இப்பொழுது தனி இராச்சியம்.

தனித் தர்பார்  
மன்னனும் கிளிதான்  
மந்திரியும் கிளிதான்  
மக்களும் கிளிகள்தான்.

# வாசகர் வாய்மொழி

## இருளை அகற்றும் சுடர்!

இருண்ட உலகத்தில் ஒளிவிட்டுப் பிரகாசிக்கிறது சுடர். "இன்றைய உலகை இருண்ட உலகம்" என்கிறேன். இதில் வியப்படைவதற்கு ஒன்றுமில்லை. உலக நாடுகளிலெல்லாம், நம் தமிழினம் அடிமைப்பட்டே வாழ்கிறது. சுதந்திர உணர்வற்று, சுயமரியாதை எழுச்சியற்று, பகுத்தறிவுக்கொள்கையற்று, இன உணர்வற்றுத், தாய்மொழிப்பற்றற்று, சாதி மதபேதம், ஏற்றத்தாழ்வு, போட்டி பொறாமை, அடிமை வாழ்வு எனும் கீழ் நிலையுற்று நம்மினம் வாழ்ந்துகொண்டிருப்பதனாலேயே, இன்றைய உலகை இருண்ட உலகம் என்கிறேன். எனவே அடிமை விலங்கறுத்து, ஒரு ஒளிமயமான எதிர்காலத்தைத் தோற்றுவிக்க உதித்துள்ள சுடரின் தீப ஒளியானது இவ்வுலகெலாம் பரவும் என நம்புகிறேன். குறிப்பாக இருண்டுபோய்க் கிடக்கும் மலையகத்திலே சூடு சொரணையற்று வாழும் நடிப்புச் சுதேசிகளைச் சுட்டெரிக்கும் எனவும் எதிர்பார்க்கின்றேன்.

ஆர். இரா. இராசமாணிக்கம்,
நேஸ்பித்தோட்டம்,
நுவரெலியா.

## கதாசிரியர்கள் சுடரை ஒளிரவைக்கவேண்டும்

தமிழின் ஒளிவீசும் 'கலை இலக்கிய' இதழ் 'சுடர்' கண்டு களிப்புற்றேன். கருத்துள்ள சிறுகதைகள், கவிதைகள், அறிவுள்ள ஆக்கங்கள் அத்தனையும் படித்தேன். சுவையில் ஒன்றை ஒன்று மிஞ்சி நிற்கின்றன. "தமிழ்" எனும் விளக்கின், "கலை—இலக்கியம்" ஆகிய எண்ணெய் வற்றி விடாமல் பாதுகாப்பதோடு "அறிவு" எனும் திரியையும் தூண்டி விட்டுக் கொண்டிருந்தால், "சுடர்" தொடர்ந்துமென் மேலும் ஒளிவீசிப் பிரகாசிக்கும். இந்தப் பணியில் அறிஞர்கள், கவிஞர்கள், கதாசிரியர்கள் அனைவரும் ஈடுபட்டு "சுடரை" குன்றாது ஒளிரவைக்க வேண்டுகிறேன்.

"வாழ்த்துகிறேன் சுடரை, பல்லாண்டு நீ வாழி!"

தி. சத்தியசீலன்,
தேற்றாத் தீவு-1.

## மறைந்துபோகும் இலக்கியத்திற்கு புத்துயிர் கொடுங்கள்

சுடர் பத்திரிகை தொடர்ந்து வாசிக்கத் தக்கதாக உள்ளது. பண்டைய இலக்கிய சம்பந்தமான கட்டுரைகளையும் பிரசுரித்து மறைந்து போகும் இலக்கியத்துக்கு புத்துயிர் அளித்தால் நன்று.

வி. எஸ். குருசாமி,
ஒய்வுபெற்ற பாடசாலை அதிபர்,
பருத்தித்துறை.

## முன்னணிச் சுடராகத் திகழவேண்டும்

சுடர் நெடுநாட்களுக்குப் பின் புதுப் பொலிவுடன் சிறப்புற்றிருப்பது கண்டு மகிழ்கின்றோம். ஆணித்தரமான அரசியற் கட்டுரையும், சிறந்த சிறுகதைகள், கவிதைகள், மற்றும் இலக்கிய அம்சங்களும் நிறைந்ததாகத் தொடர்ந்தும் ஈழத் தமிழ் இலக்கிய வானில் முன்னணியிற் சுடர் திகழவேண்டும் என்பதே எம் அவாவாகும்.

கே. கே. தியாகமணி,
நீர்வை.

## எத்தனையோ 'லாவண்யா'க்கள் காத்துக்கிடக்கின்றனர்

சீர்மாறனின் 'புண்ணியம் தேடும் பக்த கோடிகள்' சிறுகதை என்னை மிகவும் கவர்ந்தது. ஒருவகை அங்கதச் சுவையுடன் எழுதப்பட்ட இந்தக் கதையின் போக்கு, கோகிலாவுக்கு ஏற்பட்ட மரணம் படிப்போரைக் கொதிக்கச் செய்துவிடச் செய்கிறது.

"புத்தபிரான் ஏன் ஓடுகிறார்?' என்ற சிறுகதை பற்றிச் சொல்ல வேண்டும். இனக்கலவர நேரத்தில் நடந்த சம்பவங்களை நிரைப்படுத்தி, புத்தபிரான் அவற்றைத் தரிசிப்பது போன்ற கற்பனை உருவகமாகச் சிருஷ்டிக்கப்பட்டுள்ளது இது.

சீதனக் கொடுமையைவெறுத்துஒருவனுக்காகக் காத்துக்கொண்டிருக்கும் ஒருத்தியின் கதைதான் 'அந்த ஒருவனின் வரவைத்தேடி' என்ற கதை. இன்று இப்படிக் காத்துக்கிடப்பது ஒரு லாவண்யாவல்ல. எத்தனையோ லாவண்யாக்கள் இன்று கன்னிகழியாமலேயே கிழடாகிக் கட்டை ஏறுகின்ற நிகழ்ச்சிகள் இன்று நடந்துகொண்டுதான் இருக்கின்றன.


எஸ். கே. விக்னேஸ்வரன்,
அம்பன், குடத்தனை.

மில்க்வைற் தயாரிப்புக்களின் மேலுறைகளை சேகரித்து அனுப்பி சிறந்த பரிசில்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

MWS
மில்க்வைற்

மில்க்வைற்—யாழ்ப்பாணம்
தொலைபேசி 7233

கிளை:
79, மெசஞ்சர் வீதி,
கொழும்பு-12.
தொலைபேசி: 36063




# அண்ணா தயாரிப்புக்களே

உங்கள் வாடிக்கை கடைகளிலும்
இலங்கையின் எல்லாக் கடைகளிலும் கிடைப்பது

அண்ணா கோப்பி
அண்ணா தேயிலை
அண்ணா பற்பொடி
அண்ணா பத்தி
ஜெயந்தி பத்திகளே.

இவற்றின் வெற்றுப் பக்கட்டுகளை அனுப்பி விரும்பிய பரிசை பெற்றுக்கொள்ளுங்கள்.

தயாரிப்பாளர்களும், விநியோகஸ்தர்களும்:—

## அண்ணா தொழிற்சாலை

இணுவில். டெலிபோன்: 7412




இச்சஞ்சிகை 194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு-12ல் உள்ள
சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டாரால் அச்சிட்டுப் பிரசுரிக்கப்படது.